விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: ...ண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 07 | சனிக்கிழமை | (23.10.2004) | தொலைபேசி -2222278 | ஒலி 309

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310, 021 2227555, 021 2227560
FAX 021 2227310
46, ஆடியபாதம் வீதி, (பல்நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்
E-mail: thirumurugan@eudoramail.com

## அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில்

# நேரடிப் பேச்சுக்கள் தடைப்பட்டாலும் கருத்துப் பரிமாற்றம் தொடர்கின்றது

### ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தகவல்

(லண்டன்)

**இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடியான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டிருந்தாலும் நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்போது பேசப்படும் விடயங்கள் குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

பிரித்தானியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு லண்டன் சென்றுள்ள ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் பி.பி.ஸி உலக சேவையின் ஏசியா ருடே நிகழ்ச்சிக்கு அளித்த விசேட பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு நேற்று ஜேர்மனிக்குப் பயணம்

(நமது நிருபர்)

தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று ஜேர்மனி சென்றுள்ளனர்.

ஜேர்மன் சென்றுள்ள சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள

# இராணுவக் காவலரண்களை அகற்றுவதற்கு 51 வது பிரிகேட் தளபதியை தொடர்புகொள்க

### யாழ். இராணுவத் தளபதி தென்னக்கோன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைப்பகுதிக்குள் மக்களுக்கு இடையூறாகவுள்ள இராணுவ காவலரண்களை அகற்றுவது தொடர்பாக 51 ஆவது பிரிகேட் இராணுவத் தளபதியுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள இராணுவக் காவலரண்கள் மக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதினால் அந்த இராணுவக் காவலரண்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க. குணராசா, யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரத்திடம் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பாக யாழ். நீதிமன்றில் இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் ஆகியோரின் தலைமையில் நடை பெற்றது.

மாநகர சபை ஆணையாளரின் மனுவில் குறிப்பிட்ட விடயம் தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்வது குறித்து கேட்டதற்கே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

51 ஆவது பிரிகேட் இராணுவத் தளபதி நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தான் உரிய நடவடிக்கை எடுப்பதாக சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

இதைவிட போக்குவரத்துப் பிரச்சினைகள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் என்பன தொடர்பாகவும் இக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டுள்ளது.

இதற்குக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவே அவை தொடர்பான நடவடிக்கை எடுக்க முடிவதில்லை எனத் தெரிவித்தனர். இதனையடுத்து கொலை, கொள்ளை கசிப்புப் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாருடன் இராணுவமும் இணைந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிங்ஸ்லியின் மரணம் கொலை எனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் கிங்ஸ்லி இராசநாயகத்தின் மரணம் கொலை என மட்டக்களப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நேற்று மாலை மட்டக்களப்பு நீதிவான் எம்.எச்.எம். அஜ்மீர் முன்னிலையில் விசாரணைகள் நடைபெற்றன. இவ் விசாரணை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு - வவுனியாவில்

# இருவர் கைதாகி காணாமல் போனமைக்கு; இராணுவம், ஈ.பி.ஆர்.எல்.எவ். காரணம்

### நீதிவான் இளஞ்செழியன் பரிந்துரை

(வவுனியா)

முல்லைத்தீவு பகுதியில் இராணுவம் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் கைதானவர்கள் காணாமல் போவதற்கு அப்போது அப்பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவமே காரணம் என வவுனியா மாவட்ட நீதிமன்றம் கருதுவதாக வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 25 ஆம் திகதி தனது சகோதரனான மரியதாஸ் அன்டனிதாஸ் என்பவர் இராணுவத்தால் கைதாகி காணாமல் போனதாக இவரின் சகோதரி மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்து இருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தின் நியாயாதிக்கம் கொண்ட மாவட்டமாக வவுனியா இருப்பதன் காரணமாக இந்த வழக்கை வவுனியா மாவட்ட நீதிமன்றத்திற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் மாற்றம் செய்து இருந்தது. இந்த வழக்கின் விசாரணைகள் வவுனியா நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

நேற்று வெள்ளிக்கிழமை மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரிகள் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை. எனினும் வழக்காளி தரப்பில் காணாமல் போனவரின் சகோதரி ஆஜராகி இருந்தார். நீதிவான் தனது பரிந்துரையினை நீதிமன்றில் வாசித்தார். கண்ணால் கண்ட இரண்டு சாட்சிகளின்படியும் நீதிமன்றில் அளிக்கப்பட்ட இரண்டு சாட்சியங்களின் படியும் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மூலம் வழக்கில் காணாமல் போனவராக கருதப்படும் மரியதாஸ் அன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க திட்டமிடல் இயக்குநர் இராணுவ முகாம்களுக்கு விஜயம்

(நமது நிருபர்)

அமெரிக்க பசுபிக் கூட்டத்தின் பிராந்தியத்தின் திட்டமிடல் இயக்குநர் மேஜர் ஜெனரல் ஹார்டபிள்யு ஏக்கன் பெறி இலங்கைக்கான இரகசிய விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்திருப்பதாக அமெரிக்க தூதுவராலய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ஹார்டபிள்யு ஏக்கன் பெறி இலங்கையில் தங்கி இருந்தபோது முப்படைகளுக்கும் நேரடியாக விஜயம் செய்து முகாம்களை பார்வையிட்டு இராணுவ உயர் அதிகாரிகளுடனும் மற்றும் அரச அதிகாரிகளுடனும் பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டுக்கு லக்ஸபான மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபைத் தலைவர் ஆனந்த குணசேகர உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

விமானம் மூலம் பலாலிக்கு வந்த ஆனந்த குணசேகர யாழ். குடாநாட்டின் மின்சார விநியோக இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

சுன்னாகத்திலுள்ள மின் பொறியியலாளர் அலுவலகம், பிராந்திய அலுவலகம், அரச அதிபர் செயலகம், காங்கேசன்துறை கூல் எயார் ஆகியவற்றுக்கு ஆனந்த குணசேகர நேரில் விஜயம் செய்து அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின்போது ...க்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒஸ்லோ பிரகடனத்தின்படி அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

ஆட்சியிலுள்ள ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஒஸ்லோவில் செய்து கொள்ளப்பட்ட பிரகடனத்தின்படி இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிறிஸ்ரி பெரேரா மாவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ஒஸ்லோ பிரகடனம் மற்றும் டோக்கியோவில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ளது.

ஒஸ்லோப் பிரகடனத்திற்கு அமைவாகவும், டோக்கியோவில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு இணைங்கவும் அரசியல் தீர்வுக்கு செல்வதற்கான மாதிரியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதனூடாகச் சென்று உடனடியாகச் சமாதான பேச்சுவார்தைகளை ஆரம்பிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் வகிக்கும் ஜே.வி.பி சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஒஸ்லோப் பிரகடனத்தின்படி வடக்கு - கிழக்கு புனரமைப்பில் தமிழீழ விடுலைப் புலிகளுக்கும் பங்குள் ளது எனவும் தெரிவித்தார். (ந-121)

# இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டி முறையே சிறந்தது

## அமெரிக்கப் பேராசிரியர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொருத்தமான சமஷ்டி முறை ஒன்றைத் தேடிக் கொண்டால் இலங்கையில் விரைவாக சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என சர்வதேச பிரச்சினைகள் தொடர்பாக மத்தியஸ்தராக கடமையாற்றும் அமெரிக்காவின் ஹவாட் பல்கலைக்கழக பேராசிரியர் எவான் கல்ருட் தெரிவித்துள்ளார். சக வாழ்வுக்கான மன்றம் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பத்து நிறுவனங்களில் ஆலோசகராகப் பணியாற்றும் அவர் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இடைக்கால யாப்பொன்று அவசியம். ஏனெனில் தற்போது நடைமுறையிலுள்ள ஏதேனும் ஒரு யாப்பை நிறைவேற்ற வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் வேண்டும்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான யாப்பை தயாரிக்கும்போது பிரச்சினைக்கு தீர்வுகாண்பது குறித்து அதிகளவு கவனம் செலுத்தவேண்டும்

அதேபோன்று நாட்டின் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வென்ன? எவ்வாறானதான பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பது?

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையினுள் பேச்சுவார்த்தையினை உள்ளடக்குவதா? அல்லது இறுதித் தீர்வை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையினை நடாத்துவா?

இந்த இரு விடயங்கள் தொடர்பாகவும் ஒரே சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

ஒரு விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தையினை நடாத்தி பின்னர் அடுத்த விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தையினை நடாத்தினால் அங்கு நிச்சயமாக பிரச்சினைகள் எழக்கூடும் எனவும் குறிப்பிட்டார். (ந-121)

# சமாதானத்திற்கான தடைகளை இனங்கண்டு அவற்றை இல்லாதொழிப்பது இன்றியமையாதது

## பேராசிரியர் சி. மௌனகுரு சுட்டிக்காட்டு

(மட்டக்களப்பு)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் உள்ள தடைகளை இனம்கண்டு அவற்றை இல்லாதொழிக்க வேண்டுமென கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி. மௌனகுரு தெரிவித்துள்ளார்.

எகெட் நிறுவனமும், கரிற்றாஸ் நிறுவனமும் இணைந்து மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் பாடசாலையும் நடாத்திய மூன்று நாள் இளைஞர் சமாதான மாநாட்டில் நிறைவுநாள் நிகழ்ச்சிகளில் பிரதம அதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கும் தொடர்ந்தும் உரையாற்றுகையில், சமாதானப் பேச்சால் அன்றி செயல் மூலமே சத்தியமாகும். இனங்களுக்கிடையில் மட்டும் சமாதானத்தை ஏற்படுத்தினால் போதாது மதம், பிரதேசம், பால், சாதி ஆகியவற்றுக்கு இடையேயும் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆயினும் சொல்லைவிட ஒரு செயல் மேலாது. 'செயல் அதுவே சிறந்த சொல்' என்றனர். சமாதான முயற்சிகளை இன்று நாம் பத்திரிகையிலும் வெகுஜன ஊடகங்களிலும் மாநாட்டு மண்டபங்களிலும் தான் காணுகின்றோம்.

சமாதானம் பற்றிய எண்ணக்கருவை தோற்றுவிக்க இவை உதவுமாயினும், இவை முற்றாகப் போதாது.

சமாதானத்தை முன்னெடுப்பதில் உள்ள முட்டுக்கட்டைகளை இனங்கண்டு அவற்றை இல்லரதொழிக்கும் செயல்கள் அதிகம் நடைபெறவேண்டும்.

இச் செயற்பாடுகள்தான் மக்கள் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துமென தெரிவித்தார். (ந-121)

# யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்படும் குடித்தொகை அபிவிருத்திக் கல்விக்கான கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸும், சிறப்பு விருந்தினர்களாக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பதில் பீடாதிபதி பேராசிரியர் சபா. ஜெயராசா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக் கற்கைநெறிக்கான இணைப்பாளரும், புவியியற்றுறை தலைவருமான பேராசிரியர் கா. குகபாலன இந் நிகழ்விற்கு ஆர்வம் உள்ள அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுள்ளார். (ந)

# நள்ளிரவில் நடமாடிய பெண்ணுக்கு ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

இரவு நேரத்தில் நியாயமான காரணம் எதுவுமின்றி கடந்த மாதம் இறுதியில் கட்டைப்பிராய் சந்தியில் நள்ளிரவில் நடமாடிய வேளை, கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பெண்மணி குறித்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ் வழக்கு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி இப் பெண்ணுக்கு ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன், யாழ். போதான வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரியை இப் பெண்ணுக்கு ஏதாவது நோய்கள் உள்ளனவா? என்பதைக் கண்டறிவதற்காக இவரை மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்துமாறும் யாழ். சிறைச்சாலை பதில் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், இப் பெண்ணுக்கான மேற்படி பரிசோதனை முடிந்த பிற்பாடு, கைதடியில் உள்ள இரட்சணிய சேனை இல்லத்தில் இவரைச் சேர்க்குமாறு உத்தவிடப்பட்டுள்ளது. (ந-19)

## சுகாதாரச் சீர்கேட்டால் மூடப்பட்ட

# வவு. தேசிய கல்வியியற் கல்லூரி மீண்டும் திங்கட்கிழமை திறப்பு

(வவுனியா)

சுகாதாரச் சீர்கேடுகள் காரணமாக மூடப்பட்டிருந்த வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் மீளவும் திறக்கப்படவுள்ளதாக பீடாதிபதி பேனாட் தெரிவித்துள்ளார்.

சுகாதாரச் சீர்கேடு சரிசெய்யப்பட்டதையடுத்து சுகாதாரப் பிரிவினர் கல்விச் செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிக்குமாறு அறிக்கை அளித்திருப்பதை அடுத்தே இது திறக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த வாரம் சுமார் 70 ற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வயிற்றோட்ட நோய் ஏற்பட்டதன் காரணமாக சுகாதாரப் பிரிவின் வேண்டுகோளுக்கு இணங்க இக் கல்லூரி மூடப்பட்டது தெரிந்ததே.

எனவே திங்கட்கிழமை கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகவுள்ளதால் மாணவர்களை ஞாயிற்றுக்கிழமை மாலை தமது விடுதிகளுக்கு சமுகம் அளிக்குமாறு பீடாதிபதி கேட்டுள்ளார். (ந-8)

# மாங்குளம், பெரியபுளியங்குளம் பகுதிகளில் மிதிவெடி அபாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம், பெரியபுளியங்குளம் ஆகிய பகுதிகளில் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின்போது கைவிடப்பட்ட வெடிபொருட்களின் அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1997ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது படையினர் பெருமளவிலான வெடிபொருட்களை மேற்படி பகுதிகளில் புதைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால், இப்பகுதிகளில் தற்போது மீளக்குடியமரும் மக்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதில் இவ் வெடிபொருள்களால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ந-8)

# கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் - சின்னமடு பொதுமண்டபத்திற்கு மின் இணைப்பை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப் பொதுமண்டபத்தில் கிராம மாணவர்கள் கூடி இரவில் கல்வி கற்பதற்கு வசதியாக மின்சாரம் தேவையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சின்னமடுமாதா சனசமூக நிலையம் மேற்படி கோரிக்கையினை விடுத்துள்ளது. (ப-75)

# முன்பள்ளி அமைப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் கச்சாய் தெற்கு கலைமகள் சனசமூக நிலைக முன்பள்ளி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இம் முன்பள்ளி கட்டடத்திற்கு கியூடெக் நிறுவனத்தினால் [illegible] ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ப-47)

# நீதித்துறையிலிருந்து சி.வி.விக்னேஸ்வரன் ஓய்வு பெற்றார்


(கொழும்பு)

உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் நீதித்துறையிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஓய்வு பெற்றார்.

1960 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியில் இணைந்த சி.வி. விக்னேஸ்வரன் 1979 ஆம் ஆண்டு நீதித்துறையில் இணைந்து கொண்டார்.

மட்டக்களப்பு, சாவகச்சேரி, மல்லாகம், கொழும்பு, நீதிமன்றங்களில் நீதிபதியாக பதவி வகித்த அவர் 1988 ஆம் ஆண்டில் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

1995 ஆம் ஆண்டு முதல் மேல் முறையீட்டு நீதியரசராக பதவி வகித்த விக்னேஸ்வரன் 2001 ஆம் ஆண்டு முதல் இன்று வரை உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)



இலங்கை மின்சார சபையின் தலைவர் ஆனந்த குணசேகர நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். இங்குவந்த இவர் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

படங்கள்: ஞா. ஐங்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும் பற்றிய ஓர் ஆய்வு

அருட்திரு பெஞ்ஜமின் ஜெயராஜா தனது இறையியல் முதுநிலைக் கல்விப் பட்டத்திற்காக, 'இலங்கையில் உள்ள பஞ்சமர்களின் வரலாறும், யாழ். தென்னிந்தியத் திருச்சபைத் (தொடர்புக)ளும்' எனும் தலைப்பில் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரையே பஞ்சமரும் சமூகத்தொடர்புகளும்



என்ற பெயரில் இன்று நூல் வடிவம பெற்றுள்ளது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாண சமூதாயத்தில் எரிகின்ற பிரச்சினை

**நூல்:- பஞ்சமரும் சமூகத்தொடர்புகளும்**
**ஆசிரியர்:- அருட்திரு பெஞ்ஜமின் ஜெயராஜா**
**விலை:- ரூபா 200/=**

யாக விளங்கியதும், இன்றும் கூட நீறு பூத்த நெருப்பாக விளங்கி அடிககடி தன் சுயரூபத்தைக் காட்டுகின்றதுமான சாதி ஒடுக்குமுறை எனும் பிரச்சினையை தனது ஆய்வில் கருவாக்கியுள்ளார். பெஞ்ஜமின் ஜெயராஜா பஞ்சம மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் வெகுஜெனப் போராட்டமாக மேற்கிளம்பிய 1960 களை மையமாக வைத்து அதறகு முன்னரும் பின்னரும் திருச்சபை பஞ்சம மக்களோடு ஏற்படுத்தியிருந்த ஊடாட்டங்களை ஆசிரியர் தெளிவு படுத்த முனைந்திருக்கின்றார்.

அந்த வகையில் ஐரோப்பியர் வருகைககு முன்னதான யாழ்ப்பாண வரலாற்றில் இருந்து ஆய்வாளர் சாதி அமைப்புக்கான மூலதாரங்களைத தேட முற்பட்டுள்ளார். செ. இராசநாயகம ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, குலசபாநாதன் போன்றோரது கருத்துக்களை, எடுத்துக் காட்டுவதன் மூலம் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் நிலவிய சாதியமைப்பினை தெளிவு படுத்த நூல் ஆசிரியர் முயன்றுள் ளார்.

1816ல் ஈழத்திற்கு அமெரிக்க மிஷனரியினர் வருகைதந்து தம் பணிகளை ஆர்வமுடன் முன்னெடுத்த போது மக்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்பார்ப்புக்களைத் திருச்சபை நிறைவேற்றிவைத்ததா? இல்லையேல் அவ எதிர்பார்ப்புக்கள் வெறும் கானல் நீராகவே கழிந்ததா? என்னும் வினாககளுடன் இரண்டாவது அத்தியாயத்தை நகர்த்துகிறார் ஆய்வாளர். அமெரிக்கமிஷனின் வரு கையும் அது தன்னை யாழ்ப்பாண மண்ணில் ஸ்திரப்படுத்திக் கொள்ள எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களும பஞ்சமர் மக்களின் வாழ்வை முன்னெடுப

## திறனாய்வுக்களம்

பதில் அவர்கள் காடடிய அக்கறையும் ஆய்வாளரால் ஆதார பூர்வமான சான்றுகளுடன் எடுத்துக் காட்டப்படுகின்றன. பஞ்சம மக்களை ஒடுக்குமுறை வாழ்க்கையில் நின்றும மீட்டெடுத்தல் எனும் விடயத்தில திருச்சபை அகவயமாகவும் புறவயமாகவும் எதிர்நோக்கிய தடைகள், முரண்பாடுகள், சிக்கல்கள் என்பவை ஆய்வாளரால் தெளிவாகவே சுட்டப்படுகின்றன.

1948இல் இலங்கை அடைந்த சுதந்திரத்தின் பெறுபேறுகள் உடனடியாக மக்களுக்குக் கிடைக்கவில்லை. 1955 களின் பின்தான் அதன் பலாபலன்கள் கிடைக்கத் தொடங்கி இதனோடு 1956இல் நிகழ்ந்த அ(ரச)ியல் (மா)ற்றம், உலக அரங்கில் ஒடுககப்பட்ட மக்களுக்கு ஆதரவாக நிகழ்ந்து கொண்டிருநத போராட்டங்கள், ஈழத்திற்கு அறிமுகமாகிக் கொண்டிருந்த காநதீயம், இடதுசாரித் தத்துவம் முதலாயின பஞ்சம மக்களின் எழுச்சிக்கு வித்திட்டன. இடதுசாரிகள் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை வெகுஜன போராட்டமாகவே நடத்தி முடித்தனர். சீர்திருத்தம் பேசுதல், தனிமனித முடிவு, தனிநபர் போராட்டம் என்ற நிலைகளுக்கு அப்பால் ஒட்டுமொத்தமான சமூகமாற்றம் ஒன்றைக்காண முயன்றனர். ஒட்டுமொத்தமான சமூகமாற்றமே ஏற்றத்தாழ்வு அற்ற சமூக அமைப்புத் தோன்ற ஒரே வழியென அவர்கள் வாதிட்டனர். 60 களில் மேல் கிளம்பிய இப் போராட்டம் யாழ்ப்பாண சமுதாயத்தை ஓர் உலுப்பு உலுப்பியது. பஞ்சம மக்கள், தமது உரிமைகள் பலவற்றை வென்றெடுக்க இப்போராட்டம் உறுதுணையாயிற்று. இவ் வரலாற்றியக்கப் போக்கில் ஆரம்பத்திலிருந்தே பஞ்சம மக்களிகன் ஒடுக்குமுறையை எதிர்த்து வந்த திருச்சபையின் பங்களிப்பு எவ்வாறு அமைந்தது என்பதை நான்காம்,ஐந்தாம் அத்தியாயங்களில் ஆய்வாளர் விபாித்துச செல்கின்றார். புயலென எழுந்த வெகுஜனப்போராட்டத்தில் திருச்சபையின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு இருந்துள்ளது என்பதே ஆய்வாளர் நமக்குத் தரும் செய்தியாகும். கல்விப் பணியாற்றலில் பலவேறு பகுதிகளில் இருந்து வந்த தடைகளுக்குத் திருச்சபை எங்ஙனம் முகம்கொடுத்தது அல்லது வளைந்து கொடுத்தது என்பது பற்றியும் ஆய்வாளர் நடுவுநிலமையுடன் கூறிச் செல்கிறார்.

மக்கள் மத்தியில் இருந்த "சாதி பாாக்கும்" வழக்கம் முற்றாக மறைந்து விட்டதா என வினா எழுப்பினால் இல்லை என்ற பதிலே எஞ்சும். புலம பெயர்ந்து பிற நாடுகளுக்குச் சென்ற நிலையிலும் கூடத் தமிழர்கள் மத்தியில 'சாதி பார்க்கும்'போக்குகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதனை நீக்க முடியுமா? என்ற வினாவுக்கு விடையளிக்க முற்படுகின்றது. இறுதி அத்தியாயம் அதில் ஒட்டு மொத்தமான சமூக மாற்றத்துடன் மக்களின் அடிப்படை மனநிலையும் மாற்றம் அடையும் போதுதான் 'சாதி பார்க்கும்' பண்பு சமூகத்தில் நின்றும் களையப்படும் எனக குறிப்பிடுகின்றார் ஆய்வாளர். ஒட்டுமொத்தமாக நோக்கின் நன்கு திட்டமிடப்பட்ட ஆய்வொன்றினை ஜெயராஜா செய்து முடித்துள்ளார். அவா ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட விடயம் நடுவு நிலமையுடன் பக்கசசார்பின்றி அவசியம் ஆராயப்பட வேணடியதொன்று. தான் சொல்ல வந்ததை ஒளிவுமறைவுகள் இல்லாது ஆதாரபூர்வமாகத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு இவ்விடயத்தை ஆய்வு செய்வோருக்கு இருக்கவேண்டும். இந்நூலாசிரியா மேற்படி விடயங்களை மனங் கொண்டு இவ்வாய்வைத் திறம்பட அ(மைத்)துள்ளார்.

**ஈ.குமரன்**
**விரிவுரையாளர்**
**தமிழ்த் துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**

## "நாட்டார் வழக்காற்றியல்" நூல் வெளியீட்டு விழா



(யாழ்ப்பாணம்)

கலாநிதி கி.விசாகரூபனின் 'நாட்டார் வழக்காற்றியல்' நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபதத்தில் தமிழத்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழவில், வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேநதர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இராசிவச்சந்திரன் ஆகியோர் வழங்கினர். வெளியீட்டுரையை கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.மகேந்திரன் வழங்கினார்.

நூலின் முதற்பிரதியை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வழங்க யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்துறைத் தலைவர் மா.சின்னத்தம்பி பெற்றுக்கொண்டார்.

நூல் ஆய்வுரையை யாழமாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள்,மாணவாகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (ற-5)


**விவாத அரங்கு - 6**

**விடயம் : மதமாற்றத் தடைச் சட்டம் தேவையானதா? தேவையற்றதா?**

**நடுவர் : விதுரன்**

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்**

*அனுப்பவேண்டிய முகவரி*
**விவாத அரங்கு**
**வலம்புரி**
**இல.15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**


## புனருத்தர்ரண அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு -15 புளுமெண்டால் வீதியில அமைந்துள்ள ஶ்ரீ மாகாளி அம்மன் தேவஸ்தான புனருத்தாரண திருப்பணி அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஶ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் கிரியைகள் நடைபெறவுள்ளன. (ற)

## ஐ.நா. தினம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து எதிர்வரும் 25 ஆம் திகதி ஐககிய நாடுகள் தினத்தைக் கொணடாடவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியல் பிற்பகல் 1.30 மணிக்கு கொண்டாடப்படவுள்ள இந்நிகழ்வில் பல்வேறுபட்ட நிகழ்வுகளும் இடம் பெறும். (ப-127)

## கட்டாக்காலிகள் பிடிக்கப்பட்டன

(துன்னாலை)

துன்னாலைவடக்கு,தெற்கு,கிழக்கு பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனையடுத்து தமிழீழ பொருணமய மேம்பாட்டு நிறுவனம்,அப்பகுதி விவசாயிகள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கை மூலம் விவசாயிகளுக்குத் தொல்லை தந்த அனைத்துக் கட்டாக்காலி ஆடு மாடுகளும் பிடிக்கப்பட்டு அப்பகுதி விதானையிடம ஒப்படைக்கப்பட்டன. (ப-101)

## திருட்டு

(சண்டிலிப்பாய்)

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் உள்ள தனியார் கடை ஒனறு திருட்டுக் கும்பலால்உடைத்துத் திருடப்பட்டுள்ளது.

இதில் 40ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. (ப-22)









யாழ்.வலயக் கல்விப்பணிமனையில் நேற்று இடம்பெற்ற நவராத்திரி விழாவில் நல்லூர் சாதனா பாடசாலை, யாழ்.இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகளையும், யாழ் ... கத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் சிலவற்றையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- சிவசங்கர், ஐங்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம் -1

மு. திருச்செல்வம்

## பிரிட்டிஷார் வழங்கிய அரசியலமைப்பு

பேரரசுகள் நீடித்து நிலைப்பதில்லை. சாம்ராஜ்யங்கள் சாகாத வரம் பெற்றவையல்ல. அடிமைத்தனமும் ஏகாதிபத்தியமும் எந்நாளும் தொடர்வதில்லை. விடுதலைக்குரல்களின் ஒலி வலுவடைய, ஒடுக்கப்பட்டவர்களின் ஆன்மா முனகலிட்ட காலம் போய் முழக்கமிட, ஒடுக்கு பவர்களும் அடக்குபவர்களும் அநியாயமாக ஆட்சியுரிமையைப் பறித்தவர்களும் இருந்த இடம் தெரியாமல், வாழ்ந்த சுவடுகள் மறையுமுன்பே ஓடிவிடுவார்கள், ஒதுங்குவார்கள், ஒழிப்பார்கள் இது வரலாற்று நியதி.

உலக நாடுகள் பலவற்றின் ஆட்சியுரிமை, இறைமை அனைத்தும் பிரிட்டிஷ் அரசிடம் ஒரு காலத்தில இருந்தன. இக் காலம் பிரிட்டிஷ் வரலாற்றின் ஒளிமிக்க பொற்காலம். அடிமைப்பட்டு ஆட்சியுரிமை பறிக்கப்பட்டு, பிடிட்டிஷாரால் ஆளப்பட்ட நாடுகளின் வரலாற்றில் இக்காலம் இருண்ட காலமே.

பிரிட்டனின் இறைமையும், ஆட்சியுரிமையும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துடன் பிரிட்டிஷ் மன்னரிடமும் இருந்தன. ஆனால் அடிமைப்பட்ட ஏனைய நாடுகளின் ஆட்சியுரிமையும் இறைமையும் பிரிட்டிஷ் பாராளுமன்ற[illegible] அதனூடாகப் பிரிட்டிஷ் மன்னரிடமும் இருக்கவேண்டுமா?

### விடுதலைக்குரல்

முதலாவது உலகப்போர் முடிவடைந்த நாட்களிலேயே, பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த நாடுகள் பலவற்றில் விடுதலைக்குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. பிரிட்டனே துப்பாக்கி முனையில் அரசியல் அதிகாரத்தை ஏவிவிட்டு, உரிமைக்குரல்களை அடக்கியது; விடுதலை வேட்கையை ஒடுக்கியது. தன்னாட்சி முயற்சியைத தடுத்தது.

இரண்டாவது உலகப்போரின் பின்னர் உலக நாடுகளில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. காலனித்துவ நாடுகளில் விடுதலை உணர்ச்சி வீறுகொண்டு பாய்ந்தது; இவற்றுள் தலையானது இந்திய உபகண்டத்தில் எழுந்த விடுதலைப்போர். மோகனதாஸ் கரம்சந்த் காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கட்சி இப்போரை நடாத்தியது. கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று நடந்தது. இந்த அறப்போர் உலகத்தாரின் உள்ளத்தின் உட்குரலை, மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியது.

பிரிடடிஷார் விடுதலை வழங்கும்படலத்தைத்தொடங்கினார். தம்மிடம்குவிந்திருந்த ஆட்சிப்பொறுப்பை முதலில் பரவலாக்கினர். சில நாடுகள் ஆட்சியுரிமை இல்லாது ஆட்சிப் பொறுப்பை மட்டும் பெற்றன. சில நாடுகள் ஆட்சியுரிமையுடன் கூடிய ஆட்சிப்பொறுப்பைப் பெற்றதுடன் இறைமையையும் மீளப்பெற்றன.

1947 இல் இந்தியாவும் பாகிஸ்தானும் விடுதலையடைந்தன. இந்தியாவில் ஆட்சிப்பொறுப்பு இந்திய அரசுக்கு மாற்றபபட்டது. ஆட்சியுரிமையும் இறைமையும இந்திய அரசியல்மைப்பு யாக்க அவைக்கு மாற்றப்பட்டன.

1948 இல் இலங்கையின் ஆட்சிப்பொறுப்பு மட்டும் பிரிட்டிஷ் அரசிடம் இருந்து இலங்கைக்கு கையளிக்கப்பட்டது. இக்காலப்பகுதிக்கு முன்னரும் பின்னதுமாகப் பிரிட்டனிடம் அடிமைப்பட்டிருந்த நாடுகள் ஒவ்வொன்றாக விடுதலையடைந்து கொண்டே வருகின்றன.

### சோல்பரி ஆணைக்குழு

இலங்கைத்தீவின் ஆட்சிப்பொறுப்பைப் பெருமளவு இலங்கை அரசிடமே ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்தைப் பிரிட்டன் 1933 ஆம் ஆண்டளவில் ஏற்றுக்கொண்டது. ஆட்சிப்பொறுப்பு மாற்றத்தைக் கொண்டுவரும் வழிகளை ஆராயச் சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக் குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது. சோல்பரி ஆணைக்குழு 1944 ஆம் ஆண்டில் இலங்கைகக்கு வந்தது. இலங்கையைச் சுற்றிப்பார்த்தது. இலங்கை மக்களிடமும், மக்கள் தலைவர்களிடமும் கருத்துக்களைக் கேட்டது.

டொன் ஸ்டீபன் சேனாநாயக்கா தலைமையில் அரசாங்க சபையில் இருந்த அமைச்சர் குழு சோல்பரி ஆணைக்குழுவைப் பகிஷ்கரித்தது. எனினும் சிங்கள மக்களின் கருத்துக்களை சோல்பரி ஆணைக்குழு அறியாமலில்லை.

கண்டிச் சிங்களவர்கள் தங்கள் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். கூட்டாட்சி அரசு அல்லது. சமஷ்டி அரசு மூலமே தங்கள் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனக் கூறினார்கள். சமஷ்டி அரசியலமைப்பு மூலம் இலங்கை ஆட்சி செய்யப்படவேண்டும் என அன்றே கண்டிச்சிங்களவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

1944 கார்த்திகைத் திங்களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி அமைக்கப்பட்டது. இதன் தலைவராக கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம இருந்தார். தமிழர்கள் சோல்பரி ஆணைக்குழு முன் பொன்னம்பலம் தலைமையில் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

1944 நவம்பர் 27 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முதலாவது மாநாட்டில் ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையுரை ஆற்றினார். கூட்டம் கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது. அவர் ஆற்றிய உரையின் சில வரிகள் குறிப்பிடத்தக்கவை.

"... இலங்கைக்கு நாங்கள் அடிமைகளாக வரவில்லை. உரிமைகொண்ட ஆட்சியாளர்களாக வந்தோம். எமது நிலத்தில் நான் உரிமைகொண்டாடிக் குடியேறினோம். இதை நான் நினைவுபடுத்துகிறேன். தமிழர்கள் தான் இந்தத் தீவின் ஆதிக்குடிகள். இதை எமது (சிங்கள) நன்பர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். பருத்தித்துறை முதல் தேவேந்திரமுனை வரை ஆட்சிசெய்த அரசை நாம் பெற்றிருந்தோம். இதனை இலங்கையின் வரலாற்றில் காணலாம். ஜரோப்பியக் கடலாடிகள் வரும் வரை நாம் (தமிழர்கள்) அந்நியரால் ஆட்சி செய்யப்படவில்லை. எம்மை நாமே ஆட்சி செய்தோம்..."

இலங்கையின் ஆட்சியுரிமை, இலங்கையில் வாழ்கின்ற இரு பெரும் மொழி வழிச் சமூகங்களிடையே பகிர்ந்தளிக்கப்படவேண்டும் எனத் தமிழ்த் தலைவர்கள் கூறினார்கள். இலங்கை விடுதலை பெற்றால் தமிழர்கள் ஒத்த குடியுரிமை பெற்றவர்களாகவே சிங்களவர்களுடன் வாழ [illegible]கொள்வார்கள் என்ற கருத்துச் சோல்பரி ஆணைக்குழுவின் முன் ஐயம் திரிபு அற ஆணித் தர[illegible]க எடுத்துரைக்கப்பட்டது. பொன்னம்பலம் அவர்களின் இந்தக் கோரிக்கை "ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை" என பிற்காலத்தில் புகழ் பெற்றது.

தமக்கென ஆட்சியைத்தனியாகப்பிரித்துத்தரவேண்டும்எனத்தமிழர்கள்சார்பில்தமிழ்தலைவர்கள் கேட்கவில்லை. தமிழர்கள் தனியான நாட்டினம் என்பதால், தமிழர் தம்மைத் தாமே ஆளக்கூடிய தனி நாட்டுக் கோரிக்கையைச் சோல்பரி ஆணைக்குழுவின் முன்வைக்கத் தமிழ்த் தலைவர்கள் தவறினார்கள். தமிழர்களின் பாரம்பரியங்களையும், வாழ்வு முறைகளையும் உள்ளடக்கிய தமிழரின் ஆட்சியை வலியுறு[illegible]நற்குரிய நல்லதொரு வாய்ப்பு நழுவவிடப்பட்டது. கூட்டாட்சி அரசியலமைப்புக் கூடத் தமிழ்த் தலைவர்களால் கேட்கப்படவில்லை.

1945 அகடோபர் 9 ஆம் நாள் சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு ஒற்றையாட்சி அரசை விதந்துரைத்தது. வரலாற்றினூடாகத் தமிழர்கள் இலங்கைத் தீவில் தமக்கென நாடு ஆட்சி இறைமை என்பவற்றைக் கொண்டிருந்தார்கள். இந்தத் தனியுரிமையை, இந்தச் சிறப்புத்தன்மையைத் தமிழர்களி[illegible]மிருந்து பறித்தன மேனாட்டு அரசுகள். பறித்[illegible] [illegible]ல், மக்[illegible]ள் அனைவருக்கும் பொதுவான ஒற்றையாட்சி [illegible] சோல்பரி ஆணைக்குழுவின் விதப்புரைகள், இலங்கைத் தமிழர்கட்குப் பாதகமானவை. (தொடரும்)

# நவராத்திரி கவிதை மாலை

## பக்தி பகிடியாய் மாறலாமோ?

அடி உதை பட்டோம் அம்மா
ஆற்றொணாத் துயரில் மாண்டோம்
கூடியே அகதிகளாகி ஒன்றாய்
குடிமனை விட்டகன்று சென்றோம்
வாடியே வதங்கிப் பின்னே
வந்திங்கு வாழுகின்றோம்
நாடியே சமாதானத்தை இங்கு
நாளும் எதிர்பார்க்கின்றோம் நாமே
தேடியே அன்னை உன்னை
திக்கெட்டும் தடவிக் காணோம்
ஓடியே ஒழிந்து கொண்டு
ஒழித்து விளையாடு கின்றாய்
நாடிடும் சமாதானம் தன்னை
நல்கிட மறுப் பாயாகில்
பாடி நாம் பணிந்த தெல்லாம்
பகிடியாய் போகும் தாயே!

விகடகவி

## தாயே சரணம்

அன்பை அள்ளித் தந்து அருளை நாளுங்காட்டி
இன்பச் சோலை யாக்கி இனிதே கலைகள் வளர்த்து
பொங்கிப் பூசை செய்து போற்றி நவராத்திரிக்கு
என்றும் வாழ்த்திப் பாடுவோம் என்தாயே சரணமம்மா

சுகந்தினி முருகேசு
அச்சுவேலி தெற்கு.

## பல்கலையின் நாயகியே !

பங்கயத்தின் மீ தமர்ந்து
பல் கலைக ளீ கின்றாய
வெங்கொடுமை தனை யென்றும்
வேரோடு களை கின்றாய்
தங்குமெழி லோங் கிடவே
தரணிதனைக் காக் கின்றாய்
பொங்குதமிழ் பொங் கிடவே
பூரித்து மகிழ் கின்றாய்!

சாவையம்பதி கே.மகேஸ்வரி.

## நாயகியே நல்லருளைத் தா!

கல்விக் கடலூர்ந்து கலையெலாம் கவிபாடும் வல்லமையை
நீயெனக்கு வழங்கிடம்மா! - எல்லையிலா
தூயதமிழ்க் கலைகள் துலங்கி ஒளிவீச
நாயகியே நல்லருளைத் தா
சித்தம் தெளியவைக்கும் சிங்காரக் கலைகள்தமை
நித்தம் எமக்கருளும் நிர்மலமே! - புத்தியுடன்
பரவித் துதித்திடவே பங்கயத்தில் நீயமர்ந்து
இரவியெனக் களைவாய் இடர்

தென்நல்லை கு.பகீரதன்

## நலமீயும் நாமகள்

கலைத்துவம் கனிந்து பாய
க்யமைகள் கனன்று மாய
கலைமகள் கருணை யீய
காசினி களிப்பில் தோயும்
நாவில் நடம் புரிந்து
நலமீயும் நா மகளே
புவில் பொலிந் துறையும்
பொற்கொடியே போற்றுகிறேன்!
சக்தியுன் அருள் வேண்டி
சந்ததம் தவம் கிடக்கும்
புத்திகொள் எம் மினத்தைப்
புரிக்க வைத் திடம்மா!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## பிள்ளைக் குணம் தா

வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும்
கொள்ளை அழகுடைய எம் அன்னை
அள்ளக் குறையாது கல்வி தா
கள்ள மிலா நற் சிந்தை தா
பிள்ளைக் குணம் பிரியமுடன் தா
தெள்ளு தமிழில் கவி பாடு திறன் தா
கன்னற் கரும்பும் கனி வகையும்
கற்கண்டும் படைத்துன் அடிபணிந்தேன்

நீர்வை இரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபுகிரைப் சிறையில் ஈராக் கைதிகள் சித்திரவதை

# அமெரிக்க புலனாய்வுத் துறையினரினது அந்தரங்க நாடகங்கள் அம்பலமானது

(பாக்தாத்)

அபுகிரைப் சிறையில் ஈராக் கைதிகளை சித்திரவதை செய்யும்படி உத்தரவிட்டதே அமெரிக்க புலனாய்வுத் துறையான சி.ஐ.ஏயும், அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளும்தான் என்ற திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக்கில் அபுகிரைப் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஈராக்கியர்களை பிரிட்டன், அமெரிக்க இராணுவ வரர்கள் சித்திரவதை செய்தனர். உடைகளை உாநது நிர்வாணமாக்கினர். நாய்களைக் கடிக்க விட்டனர். பாலியல் சித்திரவதை செய்தனர். இந்த விவகாரம் பெரியளவில் வெடித்தது. கைதிகளுககு நடந்த கொடுமை வெளியுலகிற்குத் தெரிந்தது.

இதன்மூலம் கைதிகளுக்கு நிவாரணம் கிடைத்தது. கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது குறித்து விசாரணை நடததப்படுகிறது. சிறையில் பணிபுரிந்த அமெரிக்க வீரர்களான இவான் பெரிட்ரிக், கபடன் டொனால்ட் ரீசி ஆகியோர்மீது கடும குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளன. இதில், பெரிட்ரிக் மீது மட்டும் 5 குறறச்சாட்டுகள் உள்ளன. ஈராக்கின் தலைநகா பாக்தாத்தில் உள்ள நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது. அபுகிரைப் சிறையில் சித்திரவதைகளை நேரில பார்த்த பலர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

இந்தச் சாட்சிகள் மூலம் பல புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும், பெரிட்டிக் டொனால்ட் ஆகியோரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கைதிகளை சித்திரவதை செய்யும்படி உத்தரவிட்டதே அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ.தான் என்ற திடுக்கிடும் தகவல் வெளியானது. பெரிட்ரிக் கூறுகையில்,

சி.ஐ.ஏ.வின் அதிகாரம் பெற்ற ஓ.ஜி.ஏ என்ற அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள இரவில் சிறைக்கு வருவாகள். கைதிகளை ஒரே அறைக்குள் அடைத்து அவர்களைத் தூங்கவிடாமல் விசாரணை செய்வார்கள். அதுபோல் நடத்திய விசாரணையால் ஒரு கைதிக்கு மனநிலை பாதிக்கப்பட்டது. இதனால் அவர் அடிக்கடி பயந்து பயந்து அலறுவார் என்று பெரிட்டிக் கூறினார்.

அமெரிக்காவிலிருந்து வடியோ மூலம வாக்குமூலம் அளித்த டொனால்டும் இதே போல் தெரிவித்தார். இதன்மூலம் அபுகிரைப் கொடுமைகளுக்குக் காரணமாக இருந்தவை சி.ஐ.ஏ.யும், அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளும்தான் என்பது தெரிய வந்துள்ளது. அபுகிரைப் சித்திரவதை பற்றிய தகவல்கள் பரபரப்பாக வெளியான போது, இராணுவம்மீது கூறப்பட்ட குற்றசசாட்டுகளைப் பென்டகன் இராணுவ தலைமையகம் உறுதியாக நிராகரித்தது. சிறையில் பணிபுரிந்த மோசமான அமெரிகக, பிரிட்டன் இராணு வீரர்கள் சிலர் இது போன்ற காரியத்தைச் செய்துவிட்டனர் என்று பென்டகன் கூறியது. இப்போது அதன் குட்டு வெளிப்பட்டுவிட்டது. (ப)



சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனுடைய கூட்டாளிகள் 3 பேரைத் தமிழக அதிர டிப் படையினர் சுட்டுக் கொன்றதற்காகத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழக சிறப்பு அதிரடிப் படைத் தலைவர் கே.விஜயகுமாரை தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்துப் பாராட்டினார்.

## காய்கனி இசைக்கச்சேரி

(போலந்து)

போலந்து நாட்டின் வார்சா நகரில் நேற்று வித்தியாசமான ஒரு இசைக்கச்சேரி நடைபெற்றது.



முற்றிலும் முழுவதும் காய்கனிகளால் தயாரிக்கப்பட்ட இசைக்கருவிகள மூலம் ஆஸ்திரியாவைச் சேர்ந்த இசைக் கலைஞர்கள் கச்சேரியை நிகழ்த்தினர்.

இந்த வித்தியாசக் கச்சேரியைக் காண லட்சக்கணக்கானோர் கூடினர். படத்தில் பாாபரா என்ற பெண் இசைக்கலைஞர் கரட்டில் உருவாக்கப்பட்ட புளூட் கருவியை இசைப்பதைக் காணலாம். (ப)

## அமெரிக்காவில் விமான விபத்து 13பேர் உடல் கருகிப் பலியாயினர்

(கன்சாஸ் சிற்றி)

அமெரிக்கா, மிசோரி மாகாணத்தில் சிமிர்னா என்ற தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனம் உள்ளது. இதன் விமானம், இதே மாகாணத்தில் உள்ள கிர்க்ஸ்வில்லே என்ற விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது, திடீரென ஏற்பட்ட விபத்தில் விமானம் நொறுங்கியது.

இதில் இரண்டு பயணிகள் மட்டுமே உயிர்தப்பினர். விமானி, துணைவிமானி உட்பட 13பேர் பலியாயினர்.

விபத்துக்கான காரணம் தெரியவில்லை. விமானம் தரையிறங்குமபோது கூட, விமானியிடம் இருந்து அவசர உதவி அழைப்பு எதுவும் வரவிலலை என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.(ப)

# சீனாவில் நிலக்கரி சுரங்கத்தில் விபத்து உயிரிழந்தோர் தொகை 210 ஆக உயர்வு

சீனாவின் ஹெனான் மகாணத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 210பேர் உயிரிழந்துள்ளதுடன், 100க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

ஹெனான் மாகாணத்தில் அடங்கிய ஸிங்மி பகுதியில் செங்மெயங் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கத்தில் இந்த விபத்து நேரிட்டது. சம்பவநேரத்தில் பணியில் இருந்த தொழிலாளர்களில் 210 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாகவும அதிகாரிகளை மேறகோள காட்டி பெய்ஜிங்கில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தின்போது 100க்கும் அதிகமானோர் காயம் அடைநதனர் என்று அந்தச் செய்திகள் மேலும் தெரிவிககின்றன. சுரங்கத்திற்குள் சிக்கிகொணடிருபபவர்களை மீட்பதற்காக மீட்புக்குழுவினர் வரவழைக்கப்பட்டு பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் 210பேர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் சீனச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவிக்கிறது.


நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளபபடடு வருகிறது.

நிலக்கரிச் சரங்கத்தில் வாயு வெடிப்பு ஏற்பட்டதிலேயே இந்தத் தொழிலாளர்கள் இறந்தனர் எனத் தெரிவித்துள்ள சீன அதிகாரிகள்,

விபத்து ஏற்பட்டபோது சுரங்கத்தில் சுமார் 446 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர். அவர்களில் சுமார் 200 பேர் தப்பிவிட்டனர். மற்றவர்கள் சுரங்கத்தில் சிக்கிக்கொண்டனர். அவர்களைக் காப்பாற்ற தலைநகர் ஜெங்ஜூவல் இருந்து மீட்புப்படைகள் விரைந்துள்ளன. இருவரை 60 சடலங்கள் மீட்கப்பட்டன எனவும், மற்றவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்தனர். (ப)




## வைரக்கற்களால் உருவான மோட்டார் சைக்கிள் இது



ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனம் நிஜ வைரக்கற்களால் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை அறிமுகம் செய்துள்ளது.

இதன் இருக்கை மற்றும் வண்டி முழுவதும் விலை உயர்ந்த வைரக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதனை வாங்க உலகம் முழுவதும் கடும் போட்டி நிலவுகிறது. இப்போதே 5வருடத்திற்கு ஓடர்கள் குவிந்துள்ளதாக மோட்டார் சைக்கிள் தயாரிப்பு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், மோட்டார் சைக்கிளின் விலையைத் தெரிவிக்க மறுத்துவிட்டனர். இந்த வைரக்கல் மோட்டார் சைக்கிளைப் படத்தில காணலாம். (ப)

# சேது சமுத்திர திட்டத்தை எதிர்த்து தமிழக மீனவர்கள் போராட முஸ்தீபு

### வரும் 27ஆம் திகதி கருணாநிதி வீடு முற்றுகையிடப்படும்



(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதியின் வீட்டை நோக்கி முற்றுகைப் போராட்டம் நடத்தப் போவதாகத் தமிழக மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ்நாட்டில் கடல்வளம் குறைந்து வருகிறது. இதனால் மீனவர்கள் இலங்கை, ஆந்திரம், கேரளப் பகுதிகளில் மீன்பிடிக்கும் நிலை உள்ளது. இந்நிலையில் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சேது சமுத்திரத் திட்டம் அமுலுக்கு வந்தால் தமிழகக் கடற்பரப்பில் மீன்வளம் பாதிக்கப்படலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இதை மீனவர் சங்கங்கள் எடுத்துச் சொல்கிறோம். ஆனால் இலங்கைச் சிங்களவர்களின் தூண்டுதலால்தான் சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறுகிறார்.

இதை அவர் வாபஸ் பெறவேண்டும். இல்லையெனில் எதிர்வரும் 27ஆம் திகதி அவரது வீட்டை நோக்கி மீனவர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்துவோம். காவல்துறை அனுமதி தரவில்லையெனில் தடையை மீறி கைதாவோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ப)



ஐதராபாத்தில் ஆந்திர அரசுடன் பேச்சுவார்த்தை முடிவடைந்தவுடன் மக்கள் போர்ப்படை என்ற நக்சலைட் தலைவர் ராமகிருஷ்ணா தமது துப்பாக்கியை கையில் எடுத்துக்கொண்டு மீண்டும் தமது நிலைகளுக்குத் திரும்பும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூஸி - பங்களாதேஷ் முதல் டெஸ்ட்

# ஒரு இன்னிங்ஸ் 99 ஓட்டங்களால் நியூஸிலாந்து அமோக வெற்றி

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகளிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியின் 3ஆம் நாள் ஆட்டத்தின்போது தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 402 ஓட்டங்களைப் பெற்ற நியூஸ்லாந்து அணி ஒரு இன்னிங்ஸ் 99 ஓட்ட்ங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பங்காளாதேஷ் அணி தனது முதல் இன்னிங்சை 177 ஓட்டங்களுக்கு இழந்ததைத் தொடர்ந்து, துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 2ஆம் நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெற்றுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

18ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்த ஓரமும், 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்த மக்கலமும் நேற்று முன்தினம் 3ஆம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இருவரும் ஆடிய போது ஓட்டங்களைப் பெற்றவேளை ஓரம் 21 ஓட்டங்களுடன் ரபீக்கின் பந்து வீச்சில் ரணாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மக்கலமும் விற்றோரியும் ஜோடி சேர்ந்தனர். விற்றோரி 2 பவுண்டரிகளுடன் 23 ஓட்டங்களைப் பெற்றபோது ரணாவின் பந்து வீச்சில் இக்பாலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வநத பிராங்க்ளின் மக்கலத்துடன் இணைந்துகொண்டார். இருவரும் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தனர். பிராங்கிளின் 23 ஓட்டங்களில் ரபாஸ் பாஸியாவின் பந்துவீச்சில் சாலோயிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் மக்கலத்துடன் இணைந்து கொண்ட வைஸ்மன் 5 பவுண்டரிகளுடன் 28 ஓட்டஙகளைப் பெற்றபோது ரபீக்கின் பந்து வீச்சில் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந்தார்.



மிகவும் சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திய மக்கலம் 143 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 2 சிக்கசர்கள், 10 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டத்தைப் பெற்ற அவர் ரபீக்கின் பந்து வீச்சில் காலியிடம் பிடி கொடுத்து ஆடடமிழந்தார்.

நியூசிலாந்து அணி 402 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. பட்லர் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ரபீக் 6 விக்கெற்றுக்களையும், ரானா 3 விக்கெற்றுக்களையும் ரமாஸபாசியா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பிதத பங்களாதேஷ் அணி, 3ஆம் நாள ஆட்ட முடிவில் 2 விக்கெற்றுகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது. ஓமர் 14 ஓட்டத்துடனும ஹனான் சர்கார் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். இந்த இரு விக்கெற்றுக்களையும் விற்றோரி பெற்றார்.

நேற்று 4ஆம் நாள் ஆட்டத்தில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த பங்களாதேஷ அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 99 ஓட்டங்களால் நியூசிலாந்து அணியிடம தோல்வி அடைந்தது,

மதியபோசனத்திற்கு முன்பாகவே பங்களாதேஷ் அணி 126 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. முன்னதாக முதல் இன்னிங்ஸில் அது 177 ஓட்டங்களைப் பெற்றது. நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிஸ்சில் 402 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ப-7)

## செஸ் ஒலிம்பியாட் போட்டி

# ஐந்தாவது சுற்றில் இந்தியாவுக்கு வெற்றி

ஸ்பெயினில் நடைபெற்று வரும் 36ஆவது உலக செஸ் ஒலிம்பியாட்டின் ஐந்தாவது சுற்றில் ஆர்மேனியாவை இந்தியா தோற்கடித்துள்ளது.

சூரியசேகர் கங்குலி பெற்ற வெற்றியால் 2.5 :1.5 என்ற கணக்கில் ஆர்மோனியாவைச் சாய்த்தது இந்தியக் குழு. உலக ராபிட் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் உள்ளிட்ட மற்றைய இந்திய வீரர்கள் தத்தமது ஆட்டங்களில் சமநிலை காணவே முடிந்தது

இவ்வெற்றி மூலம் கிடைத்த புள்ளிகளையும் சேர்த்து மொத்தம் 14 புள்ளிகளுடன் 6வது இடத்தில் இந்தியா உள்ளது.

இதேவேளை ஸ்ரேலுடன் 2:2 என சமநிலை கண்ட உக்ரைன், மொத்தம் 16.5 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடத்திலுள்ளது.

அதைவிட அரைப்புள்ளி குறைவாகச் சேர்த்துள்ள இஸ்ரேல் 2வது இடத்திலும், அஜர்பைஜான் 15 புள்ளிகளுடன் 3வது இடத்திலும் உள்ளன.

14.5 புள்ளிகளுடன் ரஷ்யாவுடன் இணைந்து 4வது இடத்தில் உள்ளது பல்கேரியா. இந்தியாவுடன் நெதர்லாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போலந்து ஆகியன 14 புள்ளிகளைச் சேர்த்து கூட்டாக 6வது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-121)

# விளையாட்டு செய்திகள்

## இலங்கை அணியுடனான முதல் டெஸ்ட்டில்

# பாகிஸ்தான் 8 விக்கெற் இழப்பிற்கு 256 ஓட்டங்களைப் பெற்றுள்ளது

பாகிஸ்தான் பைசலாபாத் நகரில் நடைபெறும் இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் 2வது நாள் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் அணி 8விக்கெற்றுக்களை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக இலங்கையணி தனது முதல் இன்னிங்ஸில் 243 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுகளையும் இழந்தது,

முதல் நாள் ஆட்டமுடிவில் 7 விக்கெற்றுக்களை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கையணி 2ஆம் நாள் ஆட்டத்தில் ஆக 10 ஓட்டங்களுக்குள் தனது ஏனைய 3 விக்கெற்றுக்களையும் இழந்தது.

97 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்த டிலான் சமரவீர 100 ஓட்டங்களைப் பெற்றபோது சொகைப் அக்தாரின் பந்து வீச்சில் சமியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இது அவர் பெற்ற 8வது சதமாகும். ரங்கனஹேரத் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைப் பெற்றார்.



பந்து வீச்சில் சொகைப் அக்தார் 60 ஓட்டங்களுக்கு 5விக் கெற்றுக்களையும், முகமட் சமி 71 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுகளையும் கனேரியா 58 ஓட்டங்களுக்கு 1விக்கெற்றையும் பெற்றனர். உதிரிகளாக 9 ஓட்டங்கள் கிடைத்தன.


தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸை [illegible] தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக யாசிர் ஹமீட்டும் இம்ரான் பர்கத்தும் களமிறங்கினர்.

இம்ரான் பர்கத் 11 ஓட்டங்களுடன் மாலிங்கவின் பந்துவீச்சில் முபாரக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார், அவரைத் தொடர்ந்து ஆட வந்த அஸீம்கமால் ஓட்டங்களைப் பெறுவதைவிட தனது விக்கெற்றைக் காப்பாற்றுவதிலேயே கவனமாக இருந்தார். எனினும் 17 ஓட்டங்களில் அவர் டில்காராவின் பந்து வீச்சில் மஹிலவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் இன்ஸமாம் களமிறங்கியவேளை யாசீர் ஹமித் 58 ஓட்டங்களை பெற்றபோது டில்காராவின் பந்து வீச்சில் முபாரக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதில் 10 பவுண்டரிகளும் அடங்கும்.

தொடர்ந்து யூசுப் யுகானா 17 ஓட்டங்களுடனும், இன்ஸமாம் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மாலிக் 48 ஓட்டங்களில் ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். மொயின் கான் 5 ஓட்டங்களில் ஜெயசூரியவின் பந்துவீச்சில் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந்தார்.



அப்துல் ரஸாக் 39 ஓட்டங்களில் சமீந்தவாசின் பந்து வீச்சில் மஹிலவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் அணி 8 விக்கெற்றுக்களை இழந்து 256 ஓட்டங்களை பெற்றிருந்தது. சமி 2 ஓட்டங்களுடனும் அக்தார் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் டில்கார, ரங்கனா ஹேரத் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும், சமிந்தவாஸ், மாலிங்க, சனத்ஜெயசூரிய ஆகியோர் தலா ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர். உதிரிகளாக பாகிஸ்தான் அணிக்கு 21 ஓட்டங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று 3ம் நாள் ஆட்டம் தொடர்ந்த போது பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்சில் 264 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது, ஹேரத் மேலும் ஒரு விக்கெற்றைப் பெற்று மொத்தம் 3விக்கெற்றுக்களைப் பெற்றார்.

இலங்கையணி முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணியை விட 21 ஓட்டங்கள் பின்னிலையிலுள்ளது.

(ப-7)

# கேரளாவின் அழகில் மயங்கினார் அவுஸ்திரேலிய வீரர் மத்தியூ

சென்னையில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட்போட்டியில் சதமடித்து கலக்கிய அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரரான மத்தியூ ஹேடன் எழில் கொஞ்சும் இயற்கையை ரசிப்பதற்காக கேரளத்தில் முகாமிட்டுத் தங்கியுள்ளார்.

சென்னையிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை கொச்சின் சென்ற ஹேடன் உடனடியாக அங்கிருந்து ஆலப்புழை சென்றார்.

"இங்குள்ள பச்சைப் பசேலென்ற இயற்கை வளங்களும், குறுக்கும் நெடுக்குமாக உப்பளங்களுக்குள் ஓடும் நீர் வளங்களும், ஓங்கி வளர்ந்துள்ள பனை மரங்களுமே என்னை இங்கு அழைத்துள்ளன" என ஆலப்புழையில் ஹேடன் தெரிவித்தா.

அதைத்தொடர்ந்து இடுக்கி மாவட்டத்திலுள்ள பீர்மேடு பகுதிக்குச் செல்ல உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தனது சொந்த விருப்பின் பெயரிலேயே கேரளா சென்றுள்ள ஹேடன் அங்கிருந்து 3ஆவது டெஸ்ட் போட்டிக்காக நாகபூர் செல்கிறார். (ப-121)

# ஒஸ்திரிய ஹொக்கி அணியில் பெண் வீராங்கனை ஒருவர் இணைவு

ஹொக்கி ஆண்கள் அணியில் விளையாட வீராங்கனை ஒருவருக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

டென்னிஸ் போன்ற சில [illegible]டுகளில் ஆணும் பெண் [illegible] சர்ந்து விளையாடுவது என்ப[illegible] அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். ஆனால் குழுப போட்டியான ஹொக்கி விளையாட்டில் ஆடவருடன் இணைந்து விளையாடும் வாய்ப்பை பெற்[illegible]ளார் [illegible] ஜெமான் எனும் [illegible]ய [illegible]கனை.

33வயதாகும் இவர் உள்ளூர் லீக் போட்டியில் ஆடவர் அணியில் விளையாடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். வியட்[illegible]மிலுள்ள 3ஆவது டிவிஷன் லீக் போட்டியில் விளையாடும் [illegible]யில் கோல் காப்பாளா[illegible] ஆடவர் களமிறங்கவுள்ளார்.

காலங்கள் மாறும்போது பார்பரா ஜெமானின் விருப்பத்தை ஏன் அங்கீகரிக்கக்கூடாது என கேள்வி எழுப்பினார் ஒஸ்திரிய ஹொக்கி சம்மேளன செய்தித் தொடர்பாளர் பெட்டினா கிரஷெல்.

ஆடவர் அணியுடன் விளையாட அனுமதி கிடைத்தது குறித்து பெருமை தெரிவித்த ஜெமான் இதன் மூலம் தனது நீண்டநாள் கனவு நனவாகியுள்ளதாகக் கூறியிருக்கிறார்.

இவருக்கு முன்னதாக 1992 இல் கனடாவைச் சேர்ந்த மேனன் ரெயூம் எனும் வீராங்கனை ஒஸ்திரியாவை சேர்ந்த வேபெலட்கிர்ச் ஆடவர் அணியின் கோல் காப்பாளராக விளையாடி வரலாறு படைத்திருந்தார். [illegible]ற்குப் பின் தற்போது பார்பரா ஜெமான் ஆடவர் அணியில் விளையாடவுள்ளார். (ப-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நவராத்திரி பூஜை ஆரம்பமான வரலாறு

திருப்புகழ் ஆய்வாளர்,
திருவாசகமணி க.மாணிக்கவாசகர்



''உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க் கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோய மென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே''

சைவப் பெருமக்கள் வாழ்கின்ற இடங்களிலெல்லாம் சிறப்பாகக் கொண்டாடப்படும் நவராத்திரிபூஜை எப்பொழுது, எப்படி ஆரம்பமானது என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் எதுவுமில்லை. ஆனால் கர்ணபரம்பரையாக வழங்கிவரும் கதைகளையும், பண்டை இலக்கியப் பாடல்கள் சிலவற்றையும் பார்க்கும்போது நவராத்திரிபூஜை கவிச்சக்கரவர்த்தி கம்பர் காலத்தில்தான் ஆரம்பமானது என ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றபொழுதிலும் அதைச் சரியானது என்றோ, உண்மையானது என்றோ அறுதியிட்டுச் சொல்லஇயலாது. எனினும் சில பல அம்சங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது இப்படியும் இருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது.

இற்றைக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்னர் சேர, சோழ, பாண்டிய மன்னர் காலத்தில்-குறிப்பாகக் குலோத்துங்கசோழன் காலத்தில் - கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சரஸ்வதியின் அவதாரமாகக் கருதப்பட்ட ஔவையார் முதலிய பெரும் புலவர்கள் வாழ்ந்தனர்.

குலோத்துங்கன் சபையிலே ஒட்டக்கூத்தருக்கு அடுத்தபடியாகப் பெருமையுடன் மதிக்கப்பட்ட கம்பரின் புலமையிலே அழுக்காறு கொண்ட புலவர்கள் சிலர் எந்தவிதத்திலாவது கம்பரின் பெருமையைச் சீரழிக்கவேண்டுமென்று சூழ்ச்சி செயதனர். அந்தக் காலத்திலே பேருமபுகழுமாக வாழ்ந்தவளும், சோழ சாம்ராஜ்யத்திலே பேரழகி எனப் புகழப்பட்டவளுமான பொன்னி என்ற நாட்டியப் பெண்ணின் உதவியை நாடிப்பெற்றனர்.

தனது நளினத்தாலும், நாட்டியத்தாலும் கம்பரை மயக்கிய அப்பெண் 'தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை' என முறியொன்றை எழுதி வாங்கிப் புலவர்களிடம் கையளித்தாள். அரசசபையிலே குலோத்துங்கசோழனிடம் அம்முறிச்சீட்டைக் கையளித்த புலவர்கள் ஒரு நாட்டியக்காரிக்குக் கம்பர் அடிமைச்சீட்டு எழுதிக்கொடுத்துவிட்டார் என இகழ்ந்துரைத்தனர். "அம்பிகை சரஸ்வதியைத்தான் பொன்னி எனக் குறிப்பிட்டேன். அவளுக்கு நான் என்றும் அடிமைதான்'' எனக் கம்பர் உரைத்த சமாதானத்தை மன்னன் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் மனமுடைந்த கம்பர் வெகுண்டெழுந்து,

''மன்னவனும் நீயோ வள நாடும் உன்னதோ
உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்?
குரங் கேற்றுக் கொள்ளாத கொப்புண்டோ உண்டோ
விதந்தேற்றுக் கொள்ளாத வேந்து''

என்ற பாடலைப் பாடிவிட்டு, சோழநாட்டைவிட்டு நீங்கி சேரநாட்டையடைந்து தன்னை யாரென வெளிப்படுத்தாமல் சேரமன்னனின் அடப்பக்காரனாகப் பணியாற்றத் தொடங்கினார்.

ஒருதினம் சேர மன்னன் சபையிலே புலவர்கள் மத்தியில் ஏற்பட்ட இலக்கியச் சர்ச்சையில் கம்பர் தலையிட்டுத் தக்கபதில் இறுத்து மன்னனின் மதிப்பைப் பெற்றதைக் கண்டு ஆத்திரமடைந்த புலவர்கள் ஓர் அடப்பக்காரன் எங்களுக்குத் தமிழ் கற்பிப்பதா எனக் கோபம்கொண்டு அவரை அவமானப்படுத்தத் திட்டமிட்டனர்.

சவரத் தொழிலாளி ஒருவரைக் கம்பரது சகோதரனென நடிக்க ஏற்பாடு செய்தனர். ஒருதினம் கம்பர் தெரு வழியே சென்றுகொண்டிருக்கையில் அத்தொழிலாளி ஓடோடி வந்து கம்பரைக் கட்டித்தழுவி அண்ணாவோ! அண்ணாவோ! இத்தனை ஆண்டுகளாக எங்கு போயிருந்தீர்கள். வீட்டுக்கு வாருங்கள் என அழுதரற்றி ஆர்ப்பாட்டம் செய்தான். அவனது வற்புறுத்தலுக்கு இணங்க அவன் வீடுசென்ற கம்பர் தனக்கு ஏற்பட்ட அவமானம் தாங்காது சரஸ்வதிதேவியை நினைத்து அரற்றினார்.

கம்பரது துயர் நீங்கத் திருவுளம்கொண்ட சரஸ்வதிதேவி, கம்பர் முன் தோன்றி தனது காற்சிலம்பொன்றைக் கம்பரிடம் அளித்து, "இதனை சேர மன்னனிடம் கொடு. இச்சிலம்புகள் உங்கள் குடும்பச்சொத்து என்றும், உமது சகோதரன் என்று கூறியவனிடம் மற்றச் சிலம்பு இருப்பதாகவும் மன்னனிடம் தெரிவிப்பாயாக'' எனத் திருவாய் மலர்ந்தருளினாள்.

தேவியின் கட்டளைப்படி மறுநாள் காலை சரஸ்வதிதேவி அளித்த காற்சிலம்பை மன்னனிடம் கையளித்து, "அரசே இவை எமது குடும்பத்தின் பாரம்பரியச்சொத்து. எனது தந்தை இறக்கும்போது ஒரு சிலம்பை என்னிடமும் மற்றதை இதோ நிற்கும் என் தம்பியிடமும் கொடுத்துப் பத்திரமாகப் பாதுகாத்து வரும்படி கட்டளையிட்டார். விலைமதிப்பற்ற இச்சிலம்பு அரசனுக்கே உரியது. மறு சிலம்பைத் தம்பியிடம் பெற்றுக்கொள்ளுங்கள்'' எனத் தெரிவித்தார். சிலம்பின் அழகில் மனதைப் பறிகொடுத்த மன்னன் மற்றச் சிலம்பைக் கொண்டு வரும்படி அந்தச் சவரத் தொழிலாளிக்குக் கட்டளையிட்டார்.

புலவர்கள் கம்பருக்கெதிராகச் செய்த சூழ்ச்சி வெளியானது. சிலம்பின் வரலாறு அறிந்த மன்னன் சரஸ்வதிதேவியை நேரில் தரிசிக்கவேண்டுமென்ற தனது ஆவலைக் கம்பனிடம் வெளியிட்டான். கம்பர் சரஸ்வதிதேவியை மனதில் துதித்து "சீர்கொண்ட வெள்ளிதழ் பூங்கமலாசனத்தேவி'' எனத் தொடங்கி 30 பாடல்களைப் பாடி முடித்ததும் தேவி "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருந்தபடியே அரசசபையில் காட்சியளித்ததுடன் ''கம்பா என் காற்சிலம்பு எங்கே'' எனக் கேட்டுச் சிலம்பை வாங்கிக்கொண்டு மறைந்தருளினாள்.

இந்தவிதமாக சேர மன்னன் முன் சரஸ்வதி தேவி காட்சியளித்த நாளிலிருந்தே சரஸ்வதி பூஜை என வழங்கும் நவராத்திரி பூஜை ஆரம்பமானது என்பர்.

கம்பரைப் போலவே அம்பாள் அருள் பெற்றவர் குமரகுருபரர். இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் அவதரித்த குமரகுருபரர் 5 வயதுவரை ஊமையாக இருந்து தேவி அருளால் ஊமைத்தன்மை நீங்கி கவிபாடும் ஆற்றல் பெற்றவர். இவர் இயற்றிய மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் என்ற நூல் சோழமன்னன் அவையில் அரங்கேற்றப்பட்டபோது தேவி மீனாட்சி சிறு பெண்குழந்தை வடிவில் செம்பட்டுப் பாவாடை, அணி ஆபரணங்களுடன் வந்து சோழ மன்னன் மடியிலமர்ந்து பாடல்கள் முழுவதையும் தலையசைத்து ரசித்துக் கேட்டதுடன், அரங்கேற்றம் முடிந்ததும் மன்னன் கழுத்திலிருந்த மணிமாலையைக் கழற்றிக் குமரகுருபரருக்கு அணிந்து மறைந்தாள் என்பது கர்ணபரம்பரையாக வழங்கிவரும் வரலாறு.

காசியிலே சைவர்களுக்கு மடம் அமைக்க காசி சென்ற குமரகுருபரர் அப்போது காசியை ஆண்ட முகலாய மன்னனிடம் மடம் கட்டுவதற்கு நிலம் தரவேண்டுமெனக் கேட்டபோது, சைவர்களுக்கு நிலம் கொடுக்க விரும்பாத முகலாய மன்னன் மறுதினம் வரும்படி அவரை அனுப்பிவைத்தான் என்பதும், மன்னன் மனநிலை அறிந்த குமரகுருபரர் தேவியைத் தோத்தரிக்க, அவள் தனது வாகனமாகிய சிங்கத்தை அனுப்பி அதிலேறிச் சென்று நிலம் கேட்குமாறு குமரகுருபரரைப் பணித்தாள் என்பதும், சிங்கத்திலேறி அரசசபை வந்த குமரகுருபரரைக் கண்டு பயமடைந்த மன்னன் அவர் கேட்டபடி வானில் பறந்த பருந்து வட்டமிட்ட அவ்வளவு நிலத்தையும் மடம் கட்ட வழங்கினான் என்பதும் வரலாறு.

''அந்தரி யெந்தை துணைவி யென் பாசத் தொடரை யெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி யழியாத கன்னிகை யாரனித் தோன்
சுந்தரி கைத்தத் தாள் மலர்ந் தாளென் கருத்ததுவே'' எனத் தோத்தரிக்கிறார் அபிராமிப்பட்டர்.

அபிராமியின் கடைக்கண் பார்வை பட்டவர்களுக்கெல்லாம்-

''தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங் குழல் அபிராமி கடைக் கண்களே'' என்கிறார் அவர்.

''கொம்பனை யாளைக் குவி முலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத் திருமேனிச் சிறுமியை
நம்பியென் னுள்ளே நயர்ந்து வைத்தேனே'' -திருமூலர்

அனுசரணை:
ஈ.எஸ்.பேரம்பலம் அன்ட் கோ.
கஸ்தூரியார் வீதி.

## மேன்முறையீட்டு நீதிமன்றங்களை மாகாண ரீதியில் நிறுவ நடவடிக்கை

(கொழும்பு)

மாகாண ரீதியாக மேன்முறையீட்டு நீதிமன்றங்களை நிறுவுவதற்கும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 11 இலிருந்து 21 ஆக உயர்த்துவதற்குமான 18ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தைச் செய்வதற்காக அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கென 146வது உறுப்புரையைத் திருத்துவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாகாண மேன்முறையீடு நீதிமன்றங்களை எங்கெங்கு கூடுவதென்ற விடயம் குறித்து பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் கலந்தாலோசித்து எடுத்த தீர்மானமும் சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

உறுப்புரை [illegible]7 நீக்கப்பட்டு, அதனிடத்தில் [illegible] கொழும்பிலிருந்து பணிகளை [illegible]ற்கொள்ளத் தக்க மேன்மு[illegible]ட்டு நீதிமன்றப் பதிவகம் [illegible] நிறுவப்பட்டுள்ளதுடன், ப[illegible]வாளர் ஒருவரும் நியமிக்கப்படவுள்ளார்.

இதனை மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மேற்பார்வை செய்வார்.

மாகாண மேன்முறையீட்டுப் பதிவகங்களுக்குப் பிரதிப் பதிவாளர்கள் நியமிக்கப்படுவர். அத்துடன் நீதியரசர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். திருத்தத்திற்கென உறுப்புரை 137 இலும் திருத்தம் செய்யப்படவுள்ளது. (ற-6)

## மைத்திரிபாலவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு உரிய ஆதாரங்களை கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கெதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பியின் வவசாய அமைச்சர் அனுர குமார திசாநாயக்கவை கேட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கான விளக்கத்தை எழுத்தில் தருமாறும், குற்றச்சாட்டுகளின் ஆதாரங்களை உரிய வகையில் சமர்ப்பித்தால், அவை பற்றிய விசாரணைகளை நடத்துவதற்கான விசாரணைக்குழுவை அமைக்கமுடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தனக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டதாகவும், அதனால் தனது நன்மதிப்பு பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளதையடுத்தே, மேற்படி விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஜே.வி.பி அமைச்சர் அனுர குமார திசாநாயக்க, அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும், வேறும் ஒரு பிரதியமைச்சருமே நாட்டில் அரிசிவிலை அதிகரித்தமைக்குக் காரணம் என்று முன்னர் ஒரு முறை சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-6)

## யுத்த நடவடிக்கைகளின் பாதிப்புக்களால்
## கிளி.மாவட்டத்தில் 3841 மாணவர்கள் பாடசாலை வரவில் ஒழுங்கீனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 3ஆயிரத்து 841மாணவர்கள் பாடசாலைகளுக்கு ஒழுங்காகச் செல்வதில்லையெனப் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கை மூலம் ஏற்பட்ட வடுக்கள், பாதிப்புக்கள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் மேறகொண்ட ஆய்வுகளின்படி இதுவரை ஆயிரத்து 957ஆண் பிள்ளைகளும் ஆயிரத்து 884பெண் பிள்ளைகளும் பாடசாலைகளுக்கு ஒழுங்காகக் செல்வதில்லை.

அத்துடன் 88ஆண்களும் 60 பெண்களும் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

குடும்பங்களில் ஏற்பட்டுள்ள வறுமையால் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய அல்லது ஒழுங்கற்ற வரவில் உள்ள மாணவர்களே குடும்பச்சுமைகளைத் தாங்கி நிற்கின்றனர். இவ்வாறான காரணங்களினாலேயே இவர்கள் கல்வியை இடை நிறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்களை இனங்காண்பதுடன், இவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கோ அல்லது குடும்பச் சுமைகளைத் தாங்கக்கூடிய வகையில் இவர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவோ எந்தவொரு அமை[illegible] இதுவரை முழுமையாக மு[illegible]ல்லையென்பது குறிப்பிடத்த[illegible]

(ற-[illegible])

## மறுசீரமைக்கப்பட்ட ஓய்வூதிய வழங்கலில் தாமதம் வலிகாமம் கிழக்கு ஓய்வூதியர்கள் திரண்டு பிரதேச செயலகம் முன் போராட்ட முஸ்தீபு

(இருபாலை)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஓய்வூதியர்கள் அகிம்சைவழிப் போராட்டம் ஒன்றை கோப்பாய் பிரதேச செயலக முன்றலில் நடாத்துவதற்குத் தீர்மானிததுள்ளனர்.

இவ் ஆண்டுக்கான மறுசீரமைக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு நிலுவை இன்னமும் தமக்கு வழங்கப்படாததைக் கண்டித்தே ஓய்வூதியர்கள் இப்போராட்டத்தை நடாத்தவுள்ளனர்.

ஆயிரத்து 400றகும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் இக் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ளபோதிலும் சுமார் 180 ஓய்வூதியர்களுக்கு மட்டுமே மறுசீரமைக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு நிலுவைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும், இவர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு நிலுவையின் விபரமடங்கிய விபரக்கோவை இணைத்து அனுப்பப்படாததனால் எவ்வீதத்தில் நிலுவை வழங்கப்பட்டுள்ளது என அறிய முடியாதுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம், நல்லூர், தென்மராட்சி ஆகிய பிரதேச செயலக பிரிவிலுள்ள ஓய்வூதியர்கள் இவ் மறுசீரமைக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு சிலுவையினைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறு பாதிக்கப்பட்ட வலிகிழக்கு பிரதேச ஓய்வூதியர்களின் நிலைப்பாடு குறித்து கோப்பாய் பிரதேச ஓய்வூதியர் சங்கத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

இன்னமும் சொற்பகால அவகாசத்தினுள் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவக்கைகளை எடுத்து பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்கு சாதகமான பதிலைத் தரவேண்டும் தவறின் அகிம்சை வழிப்போராட்டங்க[illegible] கோப்பாய் பிரதேச செயலக [illegible]றலில் முன்னெடுக்க [illegible] செய்துள்ளோம்.

இம்முடிவுக்கு [illegible] ஓய்வூதியர்களும் பூரண ஆத[illegible] தெரிவித்துள்ளனர் என்றார். (ப-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

## விடுகதைகள்

1. நிலத்திலே பிறந்தவன் நீரிலே நடப்பவன் மீண்டும் நிலத்தைத தொட்டால் நிலைகுலைந்து போவான் அவன் யார்?
2. அடி காட்டுக்கு நடு மாட்டுக்கு நுனி நாட்டுக்கு அது என்ன?
3. கோடி கோடி வெளளிப் பணம் ஓடி ஓடிப்போகுது அது என்ன?
4. ஆழக் குழிதோண்ட அதிலொரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?
5. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக்கிடக்குது அது என்ன?

## இவை உங்களின் ஓவியங்கள்



அசிஸ்
கிங்ஸ்டன் சர்வதேச
பாடசாலை.



கோபிராஜ்
கிங்ஸ்டன் சர்வதேச
பாடசாலை.

*முடிந்தாலும் முடியா விட்டாலும் உதவ மாட்டேன் என்று சொல்லா தீர்கள்*

## கேளுங்கள்!



எந்தன் பேரு சிந்துங்க
எங்கப்பா பேரு நந்துங்க
எநதன அண்ணன் குண்டுங்க
எந்தன் அக்கா இந்துங்க!

வந்து பார்த்தால் தெரியுமுங்க
வாசல் சிறிசு குனியுங்க
சிந்தை மறந்தால போச்சுங்க
சிதறும் நெற்றிப் பொட்டுங்க!

அண்ணன் சுத்த முசுடுங்க
அடிக்கு முன்னே ஓடுங்க

சொன்னால் இதைக் கேளுங்க
சொல்லிவிட்டேன் பாருங்க!

S.தர்ஷினி,
யா/பெரியபுலம் ம.வி

## தெரிந்து கொள்ளுங்கள்

*எருது சண்டைப்போட்டியை தேசிய விளையாட்டாகக் கொண்டுள்ள நாடு ஸ்பெயின்.

*பிரிட்டனின் முக்கிய ஏற்றுமதிபொருள் இயந்திரங்கள்.

*காவல்துறையில் முதன்முதல் பெண்களைச் சேர்த்த நாடு பிரிட்டன்.

*நமது ஜனாதிபதியின் நுவரேலியாவில் உள்ள வாசஸ்தலம் குயின்ஸ் கொட்ரேஞ், கண்டியிலுள்ள வாசஸ்தலம் கிங்ஸ்பவலியன்.

*பாம்புகளே இல்லாத நாடு அயர்லாந்து.

*கு.நிரோஜன், கொக்குவில் இந்துக்கல்லூரி*

## தகுதி இருந்தால் மதிப்பு!



...ன எல்லோருக்கும் கேட்கும்படி இவ்வளவு பயங்கரமாகக் கர்ஜிக்கிறாய்?" என்று சிங்கத்தைக் கேட்டது அங்கு வந்த ஒரு புலி.

"என்னைக் காட்டுக்கே h urd;vd¡ எல்லோரும்



ஒப்புக்கொள்வதே நான் அப்படிக் கர்ஜனை செய்து என்னை விளம்பரப்படுத்துவதால்தான்" என்று பதில் சொன்னது சிங்கம்.

புதரின் மறைவில் மறைந்திருந்த முயல் இந்த இரண்டு விலங்குகளின் பேச்சையும் கேட்டது.

தானும் சிங்கத்தைப் போலக் குரலெழுப்பித் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அது நினைத்தது.

தான் இருந்த இடத்தில் இருந்தபடியே பெரிதாகக் குரலெழுப்பியது முயல். அந்த வழியே வந்த ஓநாய் குரல வந்த திக்கில பாய்ந்து முயலைப் பிடித்துக்கொண்டு உண்ணத்தொடங்கியது.

உயிர்போகும் பொழுது தான் முயலுக்கு, "தகுதி இருந்து விளம்பரம் செய்தால் மதிப்பு உண்டு. இல்லையேல் எனக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்" என்ற ஞானம் பிறந்தது.

## மாலைதீவு



உலகிலேயே மிகவும் தட்டையான அதாவது பூமியின் மேற்பரப்பில் கடலுக்கு இணையான அளவில் உள்ள நாடு மாலைதீவுதான்.


இந்து மகாசமுத்திரத்தில் உள்ள இந்த நாடு குறைந்த அளவு கடல் மட்டத்தைக் கொண்டுள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 8அடி உயரத்தில் மட்டுமே இந்த நாடு அமைந்துள்ளது.

## நிறந்தீட்டுங்கள்


கீழ்க்கண்ட ஓவியத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள நம்பர்களுக்குத் தகுந்தமாதிரி வண்ணம் தீட்டி மகிழுங்களேன்.

1.பழுப்பு 2.ஓரேஞ்சு 3.பச்சை 4.சிவப்பு 5.நீலம் 6.மஞ்சள்.



## கண்டுபிடியுங்கள்

ஒரு பாதையில் பூ, இன்னொரு பாதையிலோ வலையுடன் காத்திருக்கும் ஆள். தேனீக்குப் பூவில் தேனெடுக்கும் பாதைதான் வேண்டும். தவறிப்போய் 'வலை'ப் பகுதிக்குப் போய்விடக் கூடாது. அதனால் பயப்படுகிறது. நீங்கள் 'பூ' பாதையில் போய்வர வழி காட்டுங்களேன்.



## புதிர்

ஐந்து பூனைகள் ஐந்து எலிகளைச் சாப்பிட ஐந்து நிமிடங்கள் ஆகும்.

நூறு பூனைகள் நூறு எலிகளைச் சாப்பிட எவ்வளவு நேரம் ஆகும்?

## பயனுள்ள தகவல்கள்

☼தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் கிரஹாம்பெல் என்பது உங்களுக்குத் தெரியும். அதற்குமுன் அவர் என்ன வேலை செய்துகொண்டிருந்தார் தெரியுமா? காது கேட்காதவர்களுக்குப் பேசக் கற்றுக்கொடுக்கும் வேலை.

☼சனாவின் தேசியச் சின்னம் -டிராகன்.

☼மூங்கில் ஒருவகைப் புல் இனத்தைச் சேர்ந்தது. இதன் வளர்ச்சி மிக அதிகம். அதாவது ஒரு நாளைக்கு 90 சென்ரிமற்றர் உயரம்கூட வளரும்.

☼பத்திரிகைத் துறைக்காக அமெரிக்காவில் வழங்கப்படும் உயர்ந்த விருது -புலிட்சர்.

☼அறிவியல் துறையில் சாதனைக்காக UNESCO வழங்கும் விருது - கலிங்கா.

☼மருத்துவத்தின் தந்தை ஹிப்போகிரட்டிஸ்.

☼கணிப்பொறியின் தந்தை சார்ல்ஸ் பபேஜ்.

☼பறவைகளில் மிகப்பெரியது நெருப்புக்கோழி.

☼கிரிகெற் மட்டை தயாரிக்கப் பயன்படும் மரம் - வில்லோ (Willow)

☼பால் வழி அண்டவெளி -Milkywa.

*த. சிந்துஜா, யாழ். இந்து மகளிர் கல்லூரி.*

## விடைகள்

1.கப்பல் 2.நெல்/அரிசி 3.நட்சத்திரம் 4.தேங்காய் 5.மிளகாய்.

புதிர்

5நிமிடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளத்தில் துதி

உள்ளத்தில் உதித்தவளே வரலக்ஷ்மியே!
உலகறிய வைத்தவளே வரலக்ஷ்மியே!
உன்னையன்றி வேறு உண்டோ வரலக்ஷ்மியே!
உன் பாதம் சரணடைந்தோம் வரலக்ஷ்மியே!

தவலோஜினி சுப்பிரமணியம், தரம் - 10
யா/ஏழாலை மகாவித்தியாலயம்

# கல்விச் செல்வம்

வெள்ளை மனம் படைத்த
உள்ளத்திலே வீற்றிருந்து
கல்விச செல்வம் வழங்கிடும
கலைமகளே போற்றி உம் பாதம்

வ.ஸ்ரீகரன், தரம்-13
யா/ ஹாட்லிக்கல்லூரி.

# ஏங்களை காத்திடுக!

நவராத்திரி நன்நாளில்
நலங்கள் யாவும் பெறவே - நாடி
நாங்கள் பணிகின்றோம் - தாயே
நல்வித்தை தந்து எங்களை காத்திடுக

கௌசிகா அருளம்பலம், க.பொ.த. (உ/த),
யா/கனகரத்தினம் ம.ம.வித்தி.

# முத் தெய்வம்

கல்விக்கு கலைமகளாம் கலையரசி
விடியலை தந்திடுவாய் இலக்குமி
தைரியத்தை உவந்தளிக்கும் துர்க்கையே - உமை
நவ நாட்கள் தொழுதிடுவோம் நாம்

வி.ஹரிதாஸ்
தரம்-10, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# வாரி இறைத்திடுவாய்

வெள்ளைத் தாமரையில் வெண்ணிறமாய் வீற்றிருந்து
வெண்டாமரை பூவில் கண்ணயர்ந்து - அறுபத்து நான்கு
கலைகளுக்கும் அதிபதியாய் அமர்ந்திருக்கும் அன்னையே
சிறுவர் எமக்கு கல்வியை வாரி இறைத்திடுவாய்

ஆ.பிறேமச்சந்திரன்
தரம் -9
புற்றளை மகா வித்தியாலயம்.

# உயர்ந்திடுவோம்

கல்வித் தெய்வம் சரஸ்வதியை
காலையும் மாலையும் தொழுதுவரின்
கருணைகள் புரிவாள் கவலை தீரும்
கலைகளில் என்றும் உயர்ந்திடுவோம்

இராசதுரை அபிலாஷா,
தரம் - 6
இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# நவின்றிடுவாய்

நாட்டில் சமாதானம்
நல்லபடி நிலவ
நல்ல தீர்வு நாம்பெற
நாமகளே
நவின்றிடு[illegible]ய்

மு.லோஜினி
திருக்குடும்ப கன்னியர்மடம்.



# கவிதை மாலை

வெள்ளை கமலத்தில்
வீற்றிருந்து
வெண்ணிலவு தரும்
ஒளி தருவாள்
கள்ளம் கபடமற்ற
குழந்தைகட்கு
கல்வி கடலதில் சிறக்க
வைப்பாள்

இராசதுரை அபிலாஷா
தரம் - 6
யா/இந்து மகளர் கல்லூரி.

# நல்லருள் தருவாயே

கலைமகளே சரஸ்வதியே
கவின்கலைகள் கற்பதற்கு
உன் தன் கடைக்கண்ணால்
கருணை செய்ய மாட்டீரோ
உலகினிலே மாறிவரும்
உயர்ந்த கலை நானறிய
நான்முகனின் தேவியே
நல்லருள் தருவாயே

இ.கோபினா
தரம் - 9
யா/புங்குடுதீவு கமலாம்பிகை
வித்தியாலயம்.

# நலமுடன் பூசிப்போம்

மும் மூன்று நாட்களும்
முத்தேவியரின்
முழுஅருளைப்
பெற்றிடுவோம்
நம் நாட்டில் சமாதானம்
மலர்ந்திட
நவராத்திரியை நலமுடன்
பூசிப்போம்

அருள்அமுதா சக்ததரன்
கலைப்பிரிவு,
கனகரத்தினம் ம.ம.வித்தி.

# உனதருள் தாருமம்மா!

துர்க்கையாய் லட்சுமியாய்
சரஸ்வதியாய்
மூன்றாய் வடிவெடுத்து
வீரத்துடன் செல்வமும் கல்வியும்
தருபவளே - உனை
நவதினம் பூஜிக்கின்றோம்
உனதருள் தாருமம்மா

இ.சாளினி, தரம் -10
[illegible]



# தேவி சரஸ்வதியே

கல்வி தர வல்லவளே தேவி சரஸ்வதியே!
உள்ளத்தில் உதித்தவளே தேவி சரஸ்வதியே!
மனதாறப் பாட வைத்தாய் தேவி சரஸ்வதியே!
மக்கள் மனம் அறிய வைத்தாய் தேவி சரஸ்வதியே!

சுப்பிரமணியம் தவறாஜ்
தரம்-6, யா/ ஏழாலை மகா வித்தியாலயம்.

# நவராத்திரி மாலை

சொந்த இடம் வந்தும் சோதனைகள் தீரலையே
உந்தன் திருமுகத்தை உருப்படியாய்க் காணலையே
எந்தன் கலைவாணி எம் தாயே கலைமகளே
வந்து எம் கல்வி வாடாமல் காத்திடம்மா

வ.தர்மிலா
தரம் - 7
யா/புங்குடுதீவு கமலாம்பிகை
வித்தியாலயம்.

# வாகை சூட

விஜய தசமியிலே வெற்றி பல கண்டவளே!
உதய தாரகை போல் ஒளிரும் எம் தாயவளே!
வரும் நாளெல்லாம் வாகை சூட எங்களுக்கு
வரமது அளித்திடுவாய் அபிராம சுந்தரியே!

செ. செந்திரிகா
தரம் - 7
யா/புங்குடுதீவு கமலாம்பிகை
வித்தியாலயம்.

# விடியும் நாள்

கொடுமை பல கண்டு கொதித்தெழுந்த ஆதிசக்தி
அமரர் குறை தீர்த்த அகிலாண்ட ஈஸ்வரியே
எம் கொடுமை உமக்கு தெரியலையோ பராசக்தி
உம் அருளால் எம் வாழ்வு விடியும் நாள் எந்நாளோ

ந. நிறோஜா
தரம் - 9
யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.

# தந்திடம்மா

அகிலமெல்லாம் ஆளும் ஆதிபராசக்தியே
உலகமெல்லாம் உன் அருளால் ஒளிபெறட்டும்
அகதிகளாய் நம்மினமும் அலையாமல் தாயவளே
தமிழீழம் மலர உன் சக்தியினைத் தந்திடம்மா

சி.எக்சனா
தரம் - 8
யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# தனிமனித சுதந்திரம்

ஒரு பழமொழி சொல்வார்கள் "மூடனுக்கு கோபம் மூக்கின் மேலே" என்று அப்படியென்றால் மற்றவர்களுக்கெல்லாம் கோபம் காதின்மேலா என்று கேடகாதீர்கள். அப்படி இல்லை இப்போது நீங்கள் நேராக நிமிர்ந்து நில்லுங்கள் உங்கள் உடம்பில் முன்னால் இருப்பது எது? மூக்கு 'இல்லையே வயிறுதானே முன்னால் இருக்கிறது" என்று சொல்லாதீர்கள். அது ஆண்டவனாக வடிவமைத்தது கிடையாது நீங்களாகவே வடிவமைத்துக் கொண்டது. அதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். தினமும் கொஞ்ச நேரம் உடற் பயிற்சி செய்யுங்கள். சரியாகி விடும்.

மூக்கு முன்னால் இருப்பதனால் முனகோபத்தையும் மூக்கின்மேலே கோபம் என்று சொன்னார்கள் போலிருக்கிறது. முன்கோபம் என்றால் என்ன? எல்லாவற்றையும் முந்திக்கொண்டு வந்துவிடும். அதனால்தான் அது முன்கோபம். அப்படி மூடனுக்குத்தான் வரும் என்பது பழமொழி. அதுதான் 'மூடனுக்குக் கோபம் மூக்கின்மேல்' என்பது. அதுமட்டுமல்ல சிலருக்கு மூக்கில் எதுவும் பட்டால் [illegible] கோபம் வந்துவிடும்.

ஒரு [illegible] நடந்து போய்க்கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் இன்னொருவர் நடந்து போய்க் கொண்டிருந்தா. முன்னால் போய்க்கொண்டிருந்தவரின் கையில் ஒரு நீளமான கைத்தடி. அந்தக் கைத்தடியை வேகமாக முன்னாலும் பின்னாலும் வீசிக்கொண்டே அவர் நடந்துபோய்க் கொண்டிருந்தார்.

இதனால் என்ன நடந்ததென்றால் அந்தத் தடி ஆடும்போது பின்னால் வந்தவருக்குச் சிரமமாகிவிட்டது. அதுவும் எந்தவகையில்? இவரது தடி அவரது முகத்தில் போய் அடிக்கின்ற அளவுக்கு ஆகிவிட்டது. அவ்வளவு வேகமாக வீசிக் கொண்டு போனார் அவர்.

பின்னால் வநதவரும் கொஞ்சம் பொறுமையாகத் தான் வந்துகொண்டிருந்தார். இருந்தாலும் அந்தத் தடி இவர் மூக்கில் வந்து இடிக்க ஆரம்பித்ததும் இவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. முன்னால் போனவரைப் பாாத்துச சொன்னார். "இதோபாருங்கள்! கைத்தடியை இவ்வளவு வேகமாக வீசாதீர்கள் அது என் மூக்கில் வந்து இடிக்கிறது" என்றார். இதற்கு அவர் 'அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்' வீசுவது எனது உரிமை, சுதந்திரம். இப்படி தனிமனித சுதந்திரத்தில நீங்கள் தலையிடுவது நியாயமில்லை என்றார்.

இதைக் கேட்டதும் பின்னால் வந்தவர் சொன்னார் "நீங்கள் சொல்வது சரிதான். இருந்தாலும் உங்கள் தனிமனித சுதந்திரம் எனது மூக்கு ஆரம்பிக்கும் இடத்தோடு முடிந்துபோகின்றது" என்றார். அவ்வளவுதான் முன்னால் போனவர் சிரித்துக் கொண்டே சிறிது வேகமாக நடைபோட ஆரம்பித்தார்.

மூக்கின்மேல் கைத்தடி பட்டாலும்கூட அவருக்கு ஏன் மூக்கின் மேல் கோபம் வரவில்லை என்றால் அவர் பெரியவர். அதனால்தான் கோபப்படாமல் பக்குவமாக இப்படிச்சொன்னார். வேறு சாதாரண மனிதனாக இருந்தால் இவனது இந்தப் பதிலுக்கு ஒரு தடியை எடுத்துக் கொண்டு அவரது மூக்கில் இடித்திருப்பான். விவகாரம் முற்றிப்போயிருக்கும். அதன்பின் இருவருமே மூக்கில கட்டுடன் நடக்கும்படி ஆகிவிடும். அதன் காரணமாக அரசாங்கம் கைத்தடி வைத்திருப்போரெல்லாம் அனுமதிப்பத்திரம் வாங்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவரும்.

[illegible] மனித சுதந்திரம் தேவைதான் வேண்டாம் என[illegible] சொல்லவில்லை. ஆனால் அதற்காக அடுதவர்களின் மூக்கை உடைக்கும் அளவிற்குப் போனால அது நியாயமா?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## தபால் தந்திசேவை ஆரம்பம்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை - அஞ்சல் அலுவலகத்திற்கு தபால் தந்தி ஊழியர் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 வருடங்களாக தற்காலிகமாக இடைநிறுத்தபபட டிருந்த தபால் தந்தி ஊழியர்களின் சேவை வட்டுக்கோட்டை தபால் அதி[illegible] சௌந்தரராஜனின் நடவடிக்கை காரணமாக மீள ஆரம்பிக்கபபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ப-49)

### புன்னாலைக்கட்டுவன் கொலை வழக்கு;

# பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் பிணையில் செல்வதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

கடந்த செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி புன்னாலைக கட்டுவனில் அருணாச்சலம் முத்தையா என்பவரை அவரது தோட்டத்தில் வைத்துத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்தமை தொடர்பாக தடுத்துவைக்கப்பட்டுள்ள ஜயபாலசிங்கம் துஷிகாந், கந்தசாமி கனகலிங்கம், இரத்தினசிங்கம் சசீலன், இராசரத்தினம் ஷிஷ்னுகரன், கனகலிங்கம் புருஷாந்தன், தம்பிராசா ஸ்ரீகாந்தா, நல்லரத்தினம் வசீகரன், சிவசரணம் செல்வகேசவன் மற்றும் 8 பேர் தொடர்பான பிணைமனுக்கள் மீதான விசாரணை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இப் பிணைமனுவைச் சமர்ப்பித்த சட்டத்தரணி மு.சபாநாதன் இவ் வழக்கில் சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்மருக்கும் இவ் வழக்குத் தொடர்பாக எவ்வித தொடர்பும் இல்லை என்றும், இவ் வழக்கில் முதலாம், மூன்றாம் சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஜெ.துஷிகாந், இ.சசிலன் ஆகிய இருவரும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் யாழ்பல்கலைக்கழகத்தில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் என்றும் ஏனைய அறுவரும் குடும்பப் பொறுப்புள்ள இளைஞர்கள் என்றும் தெரிவித்து இவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரினார்.

இதனைத் தொடர்ந்து அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி முதலாம், மூன்றாம் சந்தேக நபர்கள் பிணையில் விடுதலைசெய்யப்படுவதனைத் தான் ஆட்சேபிக்கவில்லை என்றும், இவ் வழக்கின் விசாரணைகள் பூரணமாக முடிவடையாமையால் ஏனைய ஆறு சந்தேக நபர்களையும் பிணையில் விடுவதனைத் தான் ஆட்சேபிப்பதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, முதலாம், மூன்றாம் சந்தேக நபர்களை 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், மல்லாகம் நீதி நிர்வாக வலயத்திற்குட்பட்ட 45வயதிற்கு மேற்படாத இரண்டு நிரந்தர அரசாங்க ஊழியர்களின் தலா 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல உத்தரவிட்டார்.

அத்துடன் ஏனைய ஆறு சந்தேக நபர்களினதும் பிணை விணணப்பங்களை நீதிபதி தள்ளுபடி செய்துள்ளார். (ரு-19)

### யாழ்.தே.க.க.மாணவர் வெளியேற்றம்

# நிலைமையை விளக்கி பீடாதிபதி பெற்றோர்களுக்குக் கடிதம்

(கல்வியங்காடு)

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி ஆண் ஆசிரிய மாணவர் பயன்படுத்தும் விடுதிக்கு மலசல கூடம் பற்றாககுறை காரணமாக மேலதிகமாக மலசலகூட குழி அமைக்கப்பட்டு வருகிறது.

மலசலகூட குழி நிரம்பியதனால் ஆசிரிய ஆண் மாணவர்கள் கடந்த 13ஆம் திகதி பிரதம ஆணையாளரின் அனுமதியுடன் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தமை அறிந்ததே.

இது குறித்து கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் மாணவரின் பெற்றோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

எமது கல்லூரியில் ஆண்கள் விடுதி மலகூடக் குழி நிறைந்து துர்நாற்றம் வீசி நுளம்பு பெருகும் அபாயம் தோன்றியதால் ஆண்கள் விடுதியைப் பாதுகாப்புக்கருதி சிறிது காலம் மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. 11ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் எமக்கு கடிதம்மூலம் சுழல் பாதுகாப்பு பற்றி அறிவித்திருந்தது.

ஆகவே, மலக் குழிஅமைக்கும் பணி நிறைவடைந்ததும் மாணவர்கள் மீள கல்லூரிக்கு அழைக்கப்படுவார்கள் என்றுள்ளது.

(ப-74)

## இராசிபலன்

**23.10.2004 (ஐப்பசி 07, சனிக்கிழமை)**
**தசமி பிற்பகல் 12.57 மணிவரை**
**அவிட்டம் பிற்பகல் 2.06மணிவரை**
**இராகுகாலம் 9.02- 10.32 மணிவரை**
**சுபநேரம் 3.02-4.32 மணிவரை**
**விஜயதசமி,**
**கேதாரகௌரி விரதம் ஆரம்பம்**

- **மேடம்** எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி, குடும்ப மகிழ்ச்சி, தனதானிய சேர்க்கை.
- **இடபம்** நன்கொடை, காரிய சித்தி, பிரபுத்தனம், போசனசுகம்.
- **மிதுனம்** பிதாசிந்தை, சரீரப் பிரயாசை, வீண்செலவு, வயிற்றுக் கோளாறு.
- **கடகம்** அஜீரணக்கோளாறு, மனப்பயம், காரியதடங்கல், பணத் தட்டுப்பாடு.
- **சிங்கம்** மனோ தைரியம், கீர்த்தி, பிரயாணம், தனவரவு.
- **கன்னி** நண்பர்கள் உதவி, சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், ஆரோக்கியம்.
- **துலாம்** காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம், பிரயாணதடங்கல, குடும்பக் கவலை
- **விருச்சிகம்** தாய்வழி உறவு, தன்னம்பிக்கை குறைவு, தன விரயம், முயற்சி தாமதம்.
- **தனுசு** மனோ தைரியம், நற் கீர்த்தி, தனலாபம், போசனசுகம்.
- **மகரம்** பண விரயம், மனோ சங்கடம், குடும்பக் கவலை, காரிய தாமதம்,
- **கும்பம்** தெய்வ சிந்தை, போசன நன்மை, நல்ல முயற்சி, நண்பிகள் சந்திப்பு.
- **மீனம்** பிரயாணம், தனவிரயம், உறவினர் வெறுப்பு, காரிய தாமதம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
வளவன்

# உடுவே தம்மாலோக தேரரை ரணில் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவரும், ஐக்கியதேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் உடுவே தம்மாலோக தேரரைச் சந்தித்துப் பேச்சு நடாத்தியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அலுவலகத்தில் இந்த விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவிற்கு எதிராக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து இந்தச் சந்திப்பின் போது விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு, ஜாதிய ஹெல உறுமய ஆதரவு வழங்கக்கூடாது என இச்சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உடுவே தம்மாலோக தேரரிடம் கோரிக்கை விடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரு-121)

# இளைஞர், யுவதிகளைக்கொண்டு தேசிய சேவைச் செயலணி

### அமைக்கப் போவதாக ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர், யுவதிகளைக்கொணடு "தேசிய சேவைச் செயலணி" ஒன்றை அமைக்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமராதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த செயலணிக்குள் உள்வாங்கப்படும் இளைஞர், யுவதிகள் தேசிய ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த பொது நிர்மாணப் பணிகள், கலாசார உரிமைகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் ஜனாதிபதி கூறினார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் முன்னேற்றம் எதிர்காலத்திட்டம் என்பன தொடர்பாக கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதனைத் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்காக வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை ஈடுபடுத்திக்கொள்ளவும் அதற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக்கொடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் உறுதியளித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை - குறள்

வலம்புரி

## ...மாதானத்தை ஏற்படுத்த சர்வ...தசத்தின் பங்களிப்பு என்ன?

இலங்கை இனப்...ச்சினைக்குத் தீர்வு காணத் தவறி...ல அதனால் நாடு பா...தூர மான விளைவுகளை எதிர்நோக்கும் என உலக நாடுகள் எச்சரிக்கின்றன.

இதற்கு மேலாக சமாதானம் ஏற்படாவிட்டால் உலக நாடுகளின் நிதி உதவி கிடைக்காமல் போகுமென்ற எதிர்வு கூறலையும் நோர்வேத் தரப்பு கூறியுள்ளது.

இவ்வாறு சமாதான ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வேயும் - மற்றும் உலக நாடுகளும் எச்சரிக்கை விடுவதாக உள்ளனவே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் அவை எடுத்ததாக தெரியவில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவேண்டுமாயின் உலக நாடுகளின் அழுத்தம் இலங்கை அரசுக்கு தேவையானதாகும்.

இது எல்லோராலும் உணரப்பட்ட - பல தடவைகள் வலியுறுத்தப்பட்ட விடயமே.

இவ்வாறு உலக நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என கூறுகின்றபோது, அது விடயத்தில் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் தேவையில்லையா என்ற கேள்வி எழுகின்ற சந்தர்ப்பமும் உண்டு.

ஆனால், அத்தகையதொரு கேள்வி, ஒரு பக்கப் பார்வையினால் ஏற்பட முடியுமே தவிர அலசி ஆராய்கின்ற நிலையில் அக் கேள்வி அர்த்தமற்றதாகிவிடும். ஏனெனில், ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்துபவர்கள் விடுதலைப் புலிகள்.

அவர்களின் ஆயுதப் போராட்டம் என்பதற்குப் பின்னால் இருக்கக் கூடிய ஓர் இனத்தின் விடுதலை, உரிமை, சுதந்திரம் என்ற விடயங்கள் இங்கு கவனிக்கப்படவேண்டியவை ஆகும். விடுதலைப் புலிகள் கடந்த இரு தசாப்தங்களாகப் போராடி வருகின்றனர் எனில் அவர்களின் போராட்டம், இரு தசாப்தங்களாக நீண்டு உயர்ந்து உலகையே ஈர்க்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது எனில், அங்கு இருக்கக் கூடிய உண்மை விடுதலைப் புலிகளின் போராடடம் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதே ஆகும்.

இந்த உண்மை சொல்லித் தெரியப்படுத்துவதொன்றல்ல ஆயினும், உண்மை நிலையை புரிந்துகொள்ள முடியாத நாடுகளுக்கு தெளிவுபடுத்துவது தமிழ் மக்களின் கடமையாகின்றது.

இவை ஒருபுறம் இருக்க இனப்பிரச்சினைக்கான தீர்வில் சர்வதேசத்தின் அழுத்தம் விடுதலைப் புலிகளுக்கு தேவையில்லையா என்ற வினாவுக்குப் விடை தேடுவோம் ஆயின் அது இல்லையென்ற முடிபையே தருவதாக இருக்கும்.

ஏனெனில் விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டம் நடத்தியபோதிலும் அவர்கள் சமாதானத்தின்பால் பற்றுக்கொண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டவர்கள்.

அதற்கு மேலாக ஒருதலைப் பட்சமாக யுத்த நிறுத்தம் செய்து சமாதான சூழ்நிலையை எவ்வாறு ஏற்படுத்துவது என்ற வழிமுறையை இலங்கை அரசுக்கு உணர்த்தி உள்ளவர்களும் அவர்களே. அதுமட்டுமன்றி நாட்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நம்பிக்கையோடு நடத்தியவர்கள்.

இவ்வாறு அவர்கள் செயற்பட்டபோதிலும் அந்த நம்பிக்கையை உடைத்தவர்கள்! அதை சீர்குலைத்தவர்கள்! மீதல்லவா! அழுத்தம் கொடுக்க வேண்டும். இதனை செய்ய சர்வதேச சமூகம் முன்வருமா?

# சமாதான நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும்

## சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(ஒஸ்லோ)

ஜனாதிபதி சந்திரிகா குமாரது...ங த...மையிலான ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் சமாத...ன நட...வடிக்கைகள் தொடர்பாக உறுதியான முடிவுகளை எடுக்கவேண்டும்.



இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன தெரிவித்துள்ளார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோன்பீற்றர்சனை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,சமாதான முயற்சிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபிற்கும் பல அரசியற் கட்சிகளின் ஆதரவு உள்ளது.

இந்த நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஆளும் கூட்டணி அரசாங்கம் முழுமூச்சுடன் செயற்பட வேண்டும்.சமாதான முயற்சிகள் இழுத்தடித்துச் செல்லப்படுவதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே,சமாதான முயற்சிகள் மூலம் நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்படவேண்டும். அதன் மூலமாகத்தான் எமது தமிழ் மக்கள் நிம்மதியான சுதந்திரமான வாழ்க்கையை வாழமுடியும்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக தென்னிலங்கையில் சில தீயசக்திகள் செயற்பட்டு வருகின்றன. இது எமக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் சமாதானத்தை விரும்பும் அனைத்துத் தரப்பினருக்கும் பெரும் கவலை தரும் விடயமாகவே உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எம்மைப் பொறுத்தவரை சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் செயற்பட... வருகிறோம். நாட்டில நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும்.தமிழ்மக்கள் சுதந்திரமாக நிமிர்ந்து நிற்க வேண்டும். இதற்காக நாம் அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் செயற்பட்டு வருகின்றோம்.

சமாதான முயற்சிகள் வெற்றி இலக்கினை அடைவதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு தொடர்ந்தும் கிடைக்கவேண்டும். தமிழர் தாயகப் பகுதிகளில் குறிப்பாகப் படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அண்மைக்காலமாக இடம்பெறும் கொலைச் சம்பவங்களுக்கும் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளுக்கும் படைத்தரப்பின் பூரண ஆதரவு உள்ளது. இது நிறுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (க-121)

# ஜனாதிபதி பதவியை நீடிக்க முற்படுவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதை ஆளுங் கூட்டமைப்பு அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜ.எல. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி பதவியை ஒருவர் இரண்டுமுறையே வகிக்கமுடியும்.

அதன்பின்னர் குறிப்பிட்ட அப் பதவியில் இருந்து அவர் விலகிச்செல்லவேண்டும். இந்நிலையில் அப்பதவிக் காலத்தை நீடிப்பதோ அல்லது மீண்டும் அவர் அப்பதவிக்கு வரமுற்படுவதோ அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான செயலாகும்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அர சாங்கம் தேர்தலின் போது அடையாள அட்டையினை பயன்படுத்து வதை கட்டாயமாக்கி சுமார் 38 இலட்சம் மக்களின் வாக்குரிமைக்குக குந்தகம் விளைவிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் இம் முயற்சியானது எதிர்க்கட்சியின் தலையீட்டினால் முறியடிக்கப்பட்டது.



நாட்டின் இத்தகைய ஓர் நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் அடுத்த மாதம சமர்ப்பிக்கவுள்ள முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு என்ன நிவாரணத்தை வழங்கப போகின்றது?

நாட்டின் மொத்த சனத்தொகையில் 5 சதவீதமான அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கப்போவதாக அரசாங்கம் கூறுகின்றது.

இதேநேரம் தனியார்துறை ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு என்ன உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்கப்போக...றது? எனவும் கேள்வியெழுப்பினார். (ற-1

### பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச சங்கத்தின் பால் விற்பனைச சங்கத்தின் பாலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிய வருகிறது.

காலை 7.00 மணிக்கு முன்பதாகவே அங்கு முற்று முழுதாக பால் விற்பனை செய்யப்பட்டு விடுவதால், அதற்கு பின்னர் அங்கு பால் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இப்பால் சங்கத்திற்கு அருகிலேயே கொள் கலன்கள் கழுவிச் சுத்தம் செய்யப்படுவதால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப் பாற சங்கத்தில் கூடுதலான பாலை கொள்வனவு செய்து விற்பனை செய்யுமாறு பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுளளது. (ம)

### ஊழல் மலிந்த நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு 67ஆவது இடம்

உலகில் ஊழல் மலிந்த நாடுகளின் வரிசையில் இலங்கை 67ஆவது இடத்தை வகிப்பதாக புள்ளிவிபரங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இதற்கமைய 146 நாடுகள் ஊழல் மலிந்தவையாக இனம் காணப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில முதலிடத்தில் பங்களாதேஷும் தொடர்ந்து ஹெயிட்டி,நைஜரியா மற்றும் மியன்மார் போன்ற நாடுகளும் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

அதேவேளை, ஊழல்கள் அற்ற நாடாக பின்லாந்து தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

## இலங்கையில் வீதிக் கட்டமைப்பு போதுமானதாக இல்லையாம்!

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள வாகனங்களுடன் ஒப்பிடும்போது வீதிக் கட்டமைப்புப் போதுமானதாக இல்லையென பிரதமர் மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பன்னிப்பிட்டியவிற்கு நேற்று முனதினம் விஜயம் செய்த பிரதமர் அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

நாட்டின் வாகனங்களுக்கு ஏற்றவாறு வீதிக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக வாகனங்கள் அதிகமாக போக்குவரத்துச் செய்யும் வீதிகளை இனங்கண்டு அவற்றைப் புனரமைப்புச் செய்யவேண்டும்.

சில பிரதான வீதிகள் மிக ஒடுக்கமாகக் காணப்படுவதால் வாகனங்கள் விபத்திற்குள்ளாகின்ற நிலைமை ஏற்படும ஆபத்திருக்கின்றது.

இதனால் பிரதான வீதிகளைப் புனரமைப்புச் செய்து வீதிகளை விஸ்தரிப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகின்றது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டே வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றதாக மருத்துவ மனை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த விபத்திற்கு பிரதான காரணம் அதிக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றமையாகும்.

எனவே, நாட்டில் உள்ள வாகனங்களுக்கு ஏற்ப வீதிக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றார். (க-61)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மெதுவாகப் படிப்படியாக நாம் நம்மைப் பயிற்றுவிக்க வேண்டும். இது வேடிக்கையல்ல. ஒருநாள் அல்ல, பல ஆண்டுகள் அல்ல, பல பிறவிகள் அனாலும் ஆகலாம். பரவாயில்லை முயற்சி தொடர வேண்டும். தெரிந்தே நீங்களாகவே முயற்சியைத் தொடரவேண்டும். அங்குலம் அங்குலமாக நாம் முன்னேறுவோம். கடைசியில் உண்மையான செல்வத்தை உணர்வோம், அடை...வோம். அதனை யாரும் நம்மிடம் இருந்து பறி... முடியாது. யாரும் அழிக்கமுடியாது. அந்த இன்ப... எந்தத் துயரமும் அழிக்கமுடியாது.

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. பிரதி இராஜாங்க செயலர் நவம்பரில் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிச் செயலாளர் றிச்சர்ட் ஆமிடேஜ் அடுத்தமாத முற்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் முடிவடைந்த கையோடு தெற்காசிய நாடுகளுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு இவர் வரவுள்ளார்.

தெற்காசிய நாடுகளுக்கான இந்திய, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தினை விட றிச்சர்ட் ஆர்மிடேஜ்ஜின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இலங்கை வரும் அவர் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் அரசியல் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

(ற)

# சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வேயை விலத்த வேண்டும்

## ஹெல உறுமய பா.உறுப்பினர் வேண்டுகோள்

(கொழும்பு)

தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியிலிருந்து நோர்வே அரசு விலக வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரியத்ன தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இ[illegible]துள்ளார். சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகவே நோர்வே அரசு செயற்பட்டுவருகிறது.

இவ்வாறு தொடர்ந்தும் நோர்வே செற்படுமானால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும். அரசாங்கம் இது தொடர்பாக உடனடிக் கவனம் எடுத்து நோர்வேயை விலத்தவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ச121)

# ஐக்கிய நாடுகள் மனிதவள அபிவிருத்தி பட்டியலில் இலங்கை 96 ஆவது இடம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதவள அபிவிருத்தி சுட்டெண் பட்டியலில் உலகளாவிய ரீதியில் 177 நாடுகளுக்குள் இலங்கை 96 ஆவது இடத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைப்பின் 2004 ஆம் ஆண்டுக்கான அறிக்கையிலேயே இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனிதவள அபிவிருத்தி சுட்டெண் பட்டியலில் 2002ஆம் ஆண்டுப்பட்டியலில் இலங்கை 89 ஆவது இடத்தையும் 2003 ஆம் ஆண்டு 98 ஆவது இடத்தையும் பிடித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## நேரடிப் பேச்சுக்கள் தடைப்பட்டாலும்...

தடைப்பட்டு போயுள்ள சமாதான பேச்சுவார்த்தைகளை துரிதமாக ஆரம்பிப்பதற்குரிய நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் நோர்வே மத்தியஸ்தத்துடன் ஒன்றிணைந்து செயற்பட்டுவருகிறது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தின் யோசனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்துள்ளார்கள் என்று தான் கருதவுமில்லை; மறுத்துள்ளார்கள் என்றும் கூறமாட்டேன்.

இதற்குக் காரணம் அரசாங்கம் இதுவரை அத்தகைய யோசனைகள் எதனையும் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கவில்லை சமாதான பேச்சுவார்த்தை தொடர்பான உறுதியான நிலைப்பாடு ஒன்றை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர். இதன் பிரகாரம் இறுதி நிகழ்ச்சி நிரலைகளை தயாரிப்பதற்கு நோர்வேயுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) நிலைப்பாட்டில் தற்போது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் எதிர்கட்சிகளாக இருந்தாலும் ஆளுங்கட்சியாக இருந்தாலும் மக்கள் விடுதலை முன்னணியின் கருத்துக்களை கருத்தில் கொள்ள வேண்டி இருக்கும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்று ஜே.வி.பி இதுவரை எதுவும் கூறவில்லை.

நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அரசியல் படுகொலைகள் எமக்கு கவலை அளிப்பவையாக உள்ளன இவற்றை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். பிரச்சினைகளை கொலைகள் மூலமாக அல்லாமல் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வதே சிறந்த மார்க்கமாகும்.

அரசும் விடுதலைப் புலிகளும் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வதற்காக முன்வந்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எதிராளிகளை கொலை செய்வதை நிறுத்துவது சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பந்தமான தொன்றாகும்.

இந் நிலையில் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நாம் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டி உள்ளது.

தன்னாட்சி அதிகார இடைக்கால நிர்வாக சபை என்கின்ற புலிகளின் யோசனைகளை மிகவும் உன்னிப்பாக அரசு பரிசீலித்து வருகிறது என்று கூறிய ஹறீம் பீரிஸ் தடைப்பட்டுப் போன சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் உடனடியாக ஆரம்பிப்பது என்பது சாத்தியப்படக்கூடிய விடயமல்ல. தேர்தல் காலத்திற்கு முன் தாம் எந்த அணியையும் ஆதரிக்கப் போவதில்லை என்று கூறியிருந்தனர். கடந்த அரசுடன் புலிகள் வைத்திருந்த அந்நியோன்னிய உறவை இந்த அரசுடன் புலிகள் வைத்திருக்க விரும்பவில்லை இது தொடர்பாக எந்தவிதமான தனிப்பட்ட கருத்துக்களையும் தெரிவிக்கமுடியாது என்று கூறினார்.

(ம)

# உதவி வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களிலும், மின்னூட்டலினாலும், உயிர் இழந்தவரின் குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனை பொறியியலாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய 2002, 2003, 2004 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த மேற்படி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்யும் முகமாக குடும்ப அங்கத்தவர்கள் யாழ். மாவட்ட தொழிற்சாலைகள், பரிசோதனை பொறியியலாளரை எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி அவரது அலுவலகத்தில் சந்தித்து அதற்குரிய படிவங்களில் கேட்கப்பட்ட தகவல்களை பூர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ற)

## இராணுவக்...

செயற்படும் என தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலின் போது யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தென்னக்கோன், 51 ஆவது படைப் பிரிவுப் பிரிகேடியர், 512 ஆவது படைப் பிரிவின் பிரிகேடியர் கோப்பாய், காங்கேசன் துறை, யாழ்ப்பாணம் மற்றும் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

(ச-19)

## அமெரிக்க...

நடத்தியுள்ளார்.

இவர்களது இலங்கை விஜயத்தின் போது அமெரிக்க - இலங்கை நாடுகளுக்கிடையிலான உறவுகள் தொடர்பாகவும் இராணுவப் பலம் பெறுவதற்கும் மேஜர் ஜெனரல் ஹார்டபிள்யு ஏக்கன் பெரியின் விஜயம் உதவியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## யாழ். குடா...

பான மின்சாரத்தை குடாநாட்டுக்கு வழங்கும் சுமை குறித்தும் பேசியுள்ளார்.

இதேவேளை லக்ஸபான மின்சாரத்தை யாழ்ப்பாணத்திற்கு வழங்குவதற்கான நிதியுதவியை ஜப்பான் வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

## விஜயதசமி விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் இந்துமாமன்றம் நடத்தும் விஜயதசமி விழா இன்று காலை 10 மணிக்கு கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ந)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு விஜயதசமி விழா கொண்டாடப்படுகிறது. சங்கத் தலைவர் டாக்டர் எஸ். அருளானந்தம் தலைமையில் வணிகர் மன்றத்தின் மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது. (ப-127)

(பொன்னாலை)

அராலி வள்ளியம்மை வித்தியாசாலையில் இன்று காலை10.00மணிக்கு விஜயதசமி விழா நடைபெறவுள்ளது. அதிபர் செ. புண்ணியமூர்த்தி தலைமையில் ஏடு தொடக்கல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ச-49)

(பொன்னாலை)

அராலி சரஸ்வதி மகாவித்தியாலத்தில் விஜயதசமி விழா இன்று காலை 10.00 மணிக்கு அதிபர் மா. சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து ஏடு தொடக்கல் நிகழ்வுகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ச-49)

## வாழைவெட்டு விழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய வாழைவெட்டு விழா இன்று நடைபெறவுள்ளது. பிற்பகல் 2.00 மணிக்கு வசந்தமண்டப பூசையுடன் ஆரம்பமாகி 3.00 மணியளவில் வீதியுலாவாக சென்று சங்கரத்தை இலுப்பையடி வைரவர் ஆலயத்தில் வாழைவெட்டு விழா நடைபெறும்.

(ச-39)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நவராத்திரி விழாவையொட்டி துர்க்கா, லஷ்மி, சரஸ்வதியின் தோத்திரங்கள் அடங்கிய புத்தகத்தை மில்க்வைற் தொழிலதிபர் சிவநேயர் இ. தவகோபால் அன்பளிப்பாக வழங்கி வருகின்றார்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள மில்க்வைற் சோப் தொழிலகத்தில் இவற்றை அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளலாம்.(ற)

## பரிசளிப்பு விழா

(பொன்னாலை)

சுழிபுரம் - காட்டுப்புலம் அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சண்முகசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார்.

(ச-49)

## கிங்ஸ்லியின் மரணம்...

யின்போது மனைவி சுகிர்தாதேவி இராசநாயகம் (வயது 60) சாட்சியமளித்தார். சம்பவதினம் மாலை 4.00 மணியளவில் கல்லியங்காட்டிலுள்ள காணியைப் பார்ப்பதற்கு எனது கணவர் மெய்க்காப்பாளரான பொலிஸ் கான்ஸ்டபிள் ஹேமந்த திசநாயக்க சகிதம் வீட்டிலிருந்து திறந்த காரில் புறப்பட்டுச் சென்றார்.

6.15 மணியளவில் நான் வீடு பெருக்கிக் கொண்டிருந்த சமயம் ஒருவர் ஓடி வந்து 'ஐயாவை யாரோ சுட்டு விட்டார்கள்' என்றார்.. உடனே நான் அங்கு சென்றபோது காரின் சாரதி ஆசனத்தில், வலது பக்க காதோரம் சுடப்பட்ட நிலையில் எனது கணவர் இறந்து கிடந்தார். சுட்டவர்களை தெரியாது, இதற்கான காரணமும் தெரியாது என்று அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

காணியின் காவலாளியான இருதயம் செபமாலையும் (வயது 50) சாட்சியமளித்தார். இந்த சாட்சியங்களை பதிவு செய்த நீதிபதி குற்றவியல் சட்டத்தின் கீழ் இந்த மரணம் ஆட்கொலை எனத் தீர்ப்பளித்தார். (ச)

## இருவர் கைதாகி காணாமல்...

டனிதாஸ் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இருப்பதாக வவுனியா நீதிமன்றம் கருதுவதாகவும் இது சம்பந்தமாக இராணுவத் தரப்பில் வழங்கப்பட்ட சாட்சியத்தில் இராணுவம் தாம் மேற்படி நபரை கைது செய்யவில்லை, முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டதன் காரணமாக இருந்த ஆவணங்கள் அனைத்தும் அழிந்திருப்பதாகவும் தெரிவிப்பதன் காரணமாக குற்றப் புலனாய்வு துறையின் விசாரணை மேற்கொண்டு மேற்படி வழக்கின் தீர்ப்பு வழங்குமாறு வவுனியா நீதிமன்றம் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்வதாக நீதிவான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வவுனியா நெடுங்குளம் பகுதியில் 2000ம் ஆண்டு 8ம் மாதம் 15ம் திகதி வெள்ளை வானில் கடத்தப்பட்ட நபர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமைக்கும் இராணுவமே காரணமென வவுனியா நீதிமன்றம் கருதுவதாக வவுனியா மாவட்ட நீதிவான் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

மேற்படி இளைஞர் கைதாகி யோசப் முகாமில் வைத்திருந்ததை கண்டதாக சாட்சியொருவர் சத்தியக் கடதாசி மூலம் நீதிமன்றுக்கு தெரிவித்துள்ளார். இந் நிலையில் தற்போது ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தால் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு இருப்பதை அறிந்ததும் அதற்குப் பொறுப்புள்ள அதிகாரியாக இருந்தவரின் நடவடிக்கை கண்டனத்திற்குரியது. சாட்சிகளின் அடிப்படையிலும் விசாரணைகளின் அடிப்படையிலும் இவ் இளைஞன் காணாமற் போனதற்கு பிரதான காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் இருந்ததாகவும் இவ் வழக்கிற்கு உரிய தீர்ப்பினை வழங்குமாறு நீதிவான் மேன் முறையீட்டு நீதிமன்றிற்கு பரிந்துரைத்துள்ளார். (ச)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான...

ஜேர்மனியின் தலைநகர் பேர்ளினில் நடைபெறவுள்ள இச் சந்திப்பில் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன், பிரதிப் பணிப்பாளர் செல்வி, மட்டக்களப்பு - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச் சந்திப்பின்போது இலங்கையில் சமாதான முயற்சிகளில் தற்போதைய நிலை குறித்தும் சமகால அரசியல் நிலை தொடர்பாகவும் வடக்குக் கிழக்கு புனர்வாழ்வு தொடர்பாகவும் விசேடமாக கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

இப்பத்திரிகை வலம்புரி அச். கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org